# உசித சூடாமணி

## - நிகண்டு

பதிப்பாளர்
மு. கஸ்தூரி

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2008

# உசித சூடாமணி

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
**மு. கஸ்தூரி**

நெறியாளர்
**பேராசிரியர் வீ.அரசு**

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**

**2008**

"சுவடியியலும் பதிப்பியலும்" பட்டயப்
பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

**எண்: 53010707**

# நெறியாளர் சான்றிதழ்

**வீ. அரசு**
பேராசிரியர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - *600 005.*

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் "**சுவடியியலும் பதிப்பியலும்**" பட்டயப்பேற்றிற்காக '**உசித சூடாமணி**' என்னும் தலைப்பிலான சுவடியை **மு. கஸ்தூரி** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும், இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கின்றேன்.

நெறியாளர்,

*(வீ. அரசு)*

நாள்: - - *2008*
இடம்: சென்னை-5.

# பதிப்பாளர் உறுதிமொழி

*மு. கஸ்தூரி*
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - *600 005.*

**சுவடியியலும் பதிப்பியலும்** என்னும் பட்டயப் பேற்றிற்காக சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பெறும் **'உசித சூடாமணி'** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கின்றேன்.

பதிப்பாளர்,

மு. கஸ்தூரி,

**(மு. கஸ்தூரி)**

நாள்: - - *2008*

இடம்: சென்னை-*5.*

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 11 |
| நன்றியுரை | 14 |
| செய்யுள் | 15-76 |
| பின்னிணைப்புகள் | |
| செய்யுள் முதற்குறிப்பகராதி | 77-85 |
| சிறப்பு அருஞ்சொற்பொருள் விளக்கம் | 86-88 |
| சொல்லடைவு | 89-93 |

# பதிப்புரை

மொழி பயிற்சிக்குத் தேவையான கருவி நூல்களில் சொற்பொருள் உரைக்கும் நூல்கள் தலையாயனவாகும். தொடக்க காலத்தில் உரிச்சொல், உரிச்சொற் பனுவல் எனக் குறிக்கப் பெற்ற அந்நூல்கள், பிற்காலத்தில் 'நிகண்டுகள்' எனப் பொதுவாக வழங்கப் பெற்றன. செய்யுள் நடையில் இயற்றப் பெற்ற சொற்பொருள் உரைக்கும் நூல்களே 'நிகண்டு' என்னும் பெயரில் பரவலாக வழங்கப் பெறுகின்றன.

## நிகண்டு சொல்லாட்சி

தமிழில் 'நிகண்டு' என்ற சொல்லாட்சி முதன் முதலில் இறையனார் அகப்பொருள் உரையில் தான் கையாளப் பெற்றுள்ளது. நூற்பெயர் இடுகுறியாய் அமையும் என்பதற்கு சான்று தருமிடத்து இச்சொல்லாட்சி அந்நூலில் இடம்பெற்றுள்ளது. நூற்பெயராக இச்சொல் முதன் முதலில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் தான் வழங்கப் பெற்றுள்ளது சூடாமணி நிகண்டில்,

**"மன்னிய நிகண்டு சூடாமணி என ஒன்று சொல்வன்"**

எனப் பாயிரச் செய்யுளில் நிகண்டு என்ற சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

உசித சூடாமணி என்னும் இந்நூல் சூடாமணி நிகண்டின் பன்னிரண்டாவது தொகுதியும் தொகை யகராதியும் போலப் பெரும்பாலும் தொகைப் பொருளை விளக்கிக் கூறுவது,

**நூல் அமைப்பு**

இந்நுல் 18 அதிகாரங்களையுடையது. இதிலுள்ள கடவுள் வாழ்த்து நீங்கலாக செய்யுட்களின் எண்ணிக்கை 184 இவையாவும் அறுசீர் ஆசிரிய விருத்ததாலானது. அதற்கு ஆசிரியர் பயன்படுத்திய வாய்ப்பாடு, மா, மா, காய் இரட்டித்து வரும்.

இருமா காய்ச்சீ ரரையடிக்கா
யிவையே மற்றை யரையடிக்கும்
வருமா றுணர்க வாரணியுங்
கொங்கை பொலியு மடக்கொடியே

என்பதாகும். (விருத்தப்பாவியல்)

**நூல் வரலாறு**

கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டை தாலுகா தளியென்னும் ஜமினையாண்டு வந்த எத்திலேந்திர ஜமீந்தாரின் பிராதானியாரும் கொங்கு வேளாளர் மரபு. அளக குலத்தவருமான மதலைக் கவுண்டர், சுபுத்திரர் சுக்கிரி கவுண்டர், முன் புகழேந்திப் புலவர் பாடிய இரத்தினச் சுருக்கம் முதலிய நூல்கள் சுருங்க விருத்ததாலானும் முறையாய் பாடங்கேட்டுக் கற்போர்க்கன்றி, ஏனையோர்க்கு அவை விளங்காதிருத்தலானும் அத்தகைய நூலொன்றை விரித்துரைத்தல் வேண்டுமென்று கேட்டு கொண்டபடி வேளாண் குலத்தவரும், சீர்காழிச்சம் பந்த சுவாமிகளாம்

சங்கரமுர்த்தி தேசிகரவர்களின் புத்திர சிகாமணியான சிதம்பரக் கவிஞர் அவர்களால் இந்நூல் 18 தொகுப்புகளாய் அமைத்து பாடப்பெற்று ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன் எத்திலேந்திரன் சபையில் அரங்கேற்றப் பெற்றதாய்த் தெரிய வருகிறது.

**நூல் ஆசிரியர்**

ஸ்ரீ சாலிவாட்புர மென்னும் திருநெல்வேலியில் அவதரித்து கோயமுத்தூர் ஜில்லா பொள்ளாச்சி தாலுக்கா ஊற்றுக்குழிச் சமஸ்தான் வித்வான் சிதம்பரம் பிள்ளையவர்களால் இயற்றிய உசித சூடாமணி.

பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு வழுக்களைந்து தமிழ்ப் பண்டிதரும், இயற்றமிழ்ப் போதகாசிரியரும் நேட்டிவ் டாக்டருமாகிய கா.சந்திரசேகரம் பிள்ளையவர்களாலும், கூடியார் குமாரரும் தமிழ்ப் பண்டிதருமாகிய மருத்துவன் கா.ச.துரைசாமிப் பிள்ளையவர்களாலும் ஒருவாறு சுத்த பாடமாய் எழுதப்பட்டது.

**காலம்**

1894 ஆம் வருசம் மார்ச்சு மீஉ 20 (18 ஆம் நூற்றாண்டு)

# நன்றியுரை

**“சுவடியியலும் பதிப்பியலும்”** என்கிற பட்டயப் படிப்பில் சேர்வதற்கு வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ் இலக்கியத் துறைக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்து கொள்கிறேன்.

இப்பட்டயப் படிப்பில் செம்மையான முறையில் பயிற்சி அளித்த பேரராசிரியர் வீ.அரசு மற்றும் விரிவுரையாளர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் என்மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நெறியாளர் என்கின்ற முறையில் இத்தலைப்பினைத் தேர்ந்தெடுத்து பதிப்பிற்கு என்னை ஊக்கப்படுத்திய பேரராசிரியர் வீ.அரசு அவர்களுக்கு மிக்க நன்றி.

இப்பதிப்பு செம்மையான முறையில் வெளிவர உதவிய என் குடும்பத்தாருக்கும், ஒவ்வொரு கட்டத்திலும் உறுதுணையாக இருந்து உற்சாகப்படுத்திய அ.மோகனா, ம.சுதா அவர்களுக்கும் தட்டச்சு செய்து கொடுத்த டுடே கிராபிக்ஸ் நிறுவனத்திற்கும் என் அன்பார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உசித சூடாமணி நிகண்டு

எந்நூலை யுரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்கற்பாற்று என்னை,

"ஆயிரமுகத்தான கன்றதாயினும்
பாயிரமல்லது பனுவலன்றே"

என்பதாகலான், அப்பாயிரம் தெய்வ வணக்கமும் செய்ப்படு பொருளும் உரைப்பதால் தற்சிறப்புப் பாயிரம் என்றும், ஆக்கியோன் பெயர் முதலியன தன்னால் உரைக்கப்படும் நூற்கே உரியவாய் ஒவ்வொரு நூன்முகத்துமே உரைக்கப்படுதலின் அவற்றை யுணர்த்தும் பாயிரம் சிறப்புப் பாயிரம் என்று இரு வகைப்படும்.

என்னை,

"தெய்வ வணக்கமும் செயப்படு பொருளு
மெய்த வுரைப்பது தற்சிறப்பாகும்."

என்றும்,

"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனே யென்றிவை யெட்டொடுங்
காலங் களனே காரணமென்றிம் மூன்று
முள்பட முடிந்த பதினொன்றுஞ் சிறப்பின்
றொகை யெனத் தேறல் வேண்டும்.

என்று கூறினாராகலின் இவையுள் இப்பாயிரம் தற்சிறப்புப் பாயிரம் என்க.

## கடவுள் வாழ்த்து

### கணபதி துதி

சூட்டுக் கவிநா வலர்பாடும் துகுடீர் செய்யுட் குறும்பயனாக்
காட்டு முசிதப் பொருள்வகுத்துக் கழறு சிதசூ டாமணிக்கு
நாட்டு நெடிய புழைக்காற்று நால்வா யொற்றைக் கிம்புரிவெண்
கோட்டு மும்மதப் புகர்முகத்துக் கோமான் எமது முன்னிற்கவே.

*(1)*

### திருமுருகவேள் துதி

மூன்று தமிழினி யல்புணர்ந்த முன்னோ ருசித நூற்பொருளின்
மூன்று சங்கத் தநிகரித்த முதல்வி தனது கருணையினால்
மூன்று சபையு மெச்சுவகை மொழியு சிதசூ டாமணிக்கு
மூன்று மதசிந் துரமுகத்து முன்னோன் பின்னோன் காப்பாமே

*(2)*

### சரச்சுவதி துதி

புத்த கம்படிக் கபாமாலை பிண்டி கைபொருள் சேர்ஞான
வித்த கந்த ரித்தசெய்கை விமலை பையம லைதன்னை
மொய்த்த கொந்த ளகபார முகிழ்மு லைத்த வளமேனி
மைத்த கருங்கட் செய்வாய அணங்கி ணைவணங்
கல்செய்வாம். *(3)*

## வெள்ளை விநாயகர் துதி

“வெள்ளை வாரணப் பிள்ளையார்மன
முள்ளுவார் மனக்கள் ளுமாறுமே”

### சிறப்புப் பாயிரம்

புகழ்சேர் மறையா றங்கமுதற் போந்த சனகா தியர்க் கருணை
யிகழா தோங்கும் தனிப்பொருளை யியம்பா தியம்பும்
குருவருளால்
திகழ்பான் மையின் முன் னூல்பலவும் தேர்ந்து சிதசூ டாமணியென்
றகவா தரவி னாலொருநூ லரனை யிறைஞ்சி யுரைசெய்வோம்.
(1)

பொசியு மமுத கலைநிரம்பும் பூர ணசந்த்ரே தயமுன்னே
யொசியு மொருவின் மீன்வயங்க லொப்பா மேனு மெய்ப்பாமால்
முசிவி லாத தமிழ்ப்புலவர் மொழிநூல் உசிதப் பொருளை யமைத்
துசித சூடா மணியெனலா லோங்குஞ் சசிமீன் தகவெனவே”
(2)

## அவையடக்கம்

தேவச ரித்திரம் வருணாச்சிரம வொழுக்க மிராச சின்னம்
பூவி லெயும்விற் காமசின்னம் புகலு மெழுபெண் ணான்பருவ
மாவ லுறுமென் மணம்புணர்ச்சி யணுகும் புணர்த்தற் குறிபிரிவு
மேவற் குரிய பெண்புருட விரகம் பெண்ணின் பகை (1)

பாத மாதி மடவார்க்குப் பகரு முவமை யலங்கார
ஓத விசையும் பெண்புருட வுவமை யலங்கா ரம்பொருண்மூன்
றேத மிலுதா ரணவொழிபா யிசைந்த தொகுப்புப் பதினெட்டுப்
பேத மறமுன் னோர்நூலிற் பேணு மரபி லாராய்ந்து (2)

சீர்கொ ளடிகை வரைமேவுந் திரிமூர்த் திகடஞ் சேவடியை
வார்கொ டுதியிற் சென்றுதினம் வணங்கு நியதி பெறுமனத்தான்
பார்கொள் புகழ்மே ழித்தவசன் பற்றார் விரும்பிப் பணிபதத்தான்
ஓர்கொள் வீரத் தனுவிசைய னியம்பு நிசவா சகநிபுணன் (3)

சித்ர கூடமே டையுயர் சிகர மாடக் கார்வழியான்
நித்ய சுபமங் களவோதை நிகழ வோங்கும் வாசலினான்
பத்தி தருமும் முரசுதினம் பாரித் திசைக்கு முன்றில பெறும்,
எத்தி லேந்திர னாதிகத்துக் கியல்பிற் சிறந்த பிரதானி (4)

மந்த மருத்துத் தடங்கிரியு மகமே ருவுஞ்ச மானமதென்
நிந்தப் புவனம் புகாப்பெருமைக் கேற்ற கொங்க நாட்டதிபன்
தந்திக் குதைய னையங்கதியிற் றாண்டு பரிக்கு நகுலன்றண்
பந்த நிழற்றுங் கவிகையெழிற் பசும்பொற் றந்தச் சிவிகையினான்
(5)

பருவ மகில்போ லியாவர்க்கும் பரிவி லுதவு கீர்த்தியினான்
செருவில் வீம னளககுல திலகன் குவளை யணிமார்பன்
தருவை நிகரு மதலையரு டனையன் மனுநூல் வழிதெரிந்த
துருவன் சுக்கிரி மகிபாலன் சுமுகன் மகிழ்ந்தி னிதுகேட்ப (6)

கள்ள றாமென் குவளையலர் கழனி புடைசூழ் திருப்புகலி
வள்ளங் குருசந் ததிமரபில் வந்த மால்சங் கரமூர்த்தி
விள்ள லருமெய்த் தவப்புதல்வன் மேலாஞ் சிதம்ப ரக்கவிஞன்
உள்ள நயந்து சிதசூடா யென்றோர் நூலு ரைத்தனனே (7)

## (1) க. ஆவது தேவசரித்திரம்

பூவார் செழுந்தண் கயிலையினிற் பொலிந்த சபையின் முநிவர்தொழ
வோவா கடஞ்செய் யிருப்பதத்தை யுள்ளம் பிரியா
தமைத்திறைஞ்சி
மூவா முதல்வ னாதிபெறு முதன்மை கருதி நாலைந்து
பாவாற் றேவ சரிதத்தைப் பாடுந் தொகுப்புப் பகலுற்றாம் (1)

திங்கண் மறைவெண் டலைமாலை திகழ்வெள் ளெருக்கா
றறுகுவில்வந்
தங்குந் திரிப தகைகொன்றைச் சடையான் திரிசூ லப்படையான்
பொங்கு மரவு மாமையெ ஃகும் பூண்டோன் சங்குக்குழையண்ணல்
அங்கை யேந்தி யீமத்தீ லாடி பிரம சிரம்வைத்தோன் (2)

முந்தித் தவத்தோர் யாகத்தின் முயன்று வருந்திப் பொரவிடுத்தி
தந்த பகவான் முயிலகன்செந் தழல்பாம் புழுவை புலிமுதலாய்
வந்த பகைவ ரொடுங்கவுந்தன் வசமா யடக்கி யுவந்துகொண்டோன்
சுந்த ரன்றூ தன்தடைதன் றோரன் தோடு டைச்செவியன் *(3)*

அடுத்த காலன் றனைமார்க்கண் டற்கா யுதைத்தோன் மலரம்பு
தொடுத்த மதனை யெரித்தவனஞ் சுண்டு தேவ ருயிர்காத்தோன்
படுத்த திரிபு ரத்தையழற் படுத்த நகையான் றிக்குடையா
யுடுத்தோன் கயிலை யெடுத்தவனை யுடன்றே விரலா லீடழித்தோன்

*(4)*

செக்கர் வான்மின் பவளநிகர் செப்பும் சடையான் கனபவளத்
தக்க படிவ மெனுமுருவம் சாரு முவதைத் திருவடிவான்
புக்க லைச்சோ மன்பரிதி பொங்கு கனல்என் றிவையிசைந்த
முக்கணு டையான் கொடியூர்தி மூரி விடையா னுமைபாகன்

*(5)*

மாலுக்குச் சக்கர மளித்தோன் மாலு மயனுங் காண்பரியோன்
பாலுக்குப் பால கனிரங்கப் பரிந்து பாற்க டலையீய்ந்தோன்
கோலத் தடுத்த மோகினியைக் கூடிச் சாத்தன் றனையளித்தோன்
ஆலித் தெழுந்த சலந்தரனை யடர்ந்தோன் பஞ்சசக் கரமுகத்தான்

*(6)*

விரியு மண்ட பிண்டமெலாம் விளங்கும் பொருளைந் தொழிற்கருத்த
னுரிய மறையா கமவடிவா லுன்னு முநிபார்ப் பினிமாக்கள்
அரிய தாரு கவனஞ்சென் றரித்துப் பலியேற் ருனின்றான்
பிரிவிற் பிறவுஞ் சிவசரிதம் பாடு மியலைப் பகர்வாயே. (7)

## திருமால்

கன்று குனிலா யெடுத்துவிளங் கனியை யுகுத்தோ னாயர்மனை
சென்று தயிர்பா லுரிவெண்ணெய் திருடி நுகர்ந்து கட்டுண்டோன்
குன்று குடையாய் மழைதடுத்தோன் குடைக்கு மாயர் குலமாதர்
நின்று நாணத் துகில்கவர்ந்து நிலைசேர் குருந்த மொசித்தபிரான்
(8)

ஆலி லறவிற் பாற்கடலில் அணுகி வோங்கிப் பசுமேய்க்குங்
கோலின் மகிழ்ந்து கண்டுயில்வோன் கூறும் பதினா யிரம்பெண்
மாலி னிவர்ந்தே யவரவர்தம் மனைக டோறு மொருவடிவாய்
மோலி தெரியா மற்காட்டி முயங்கு மாய சொரூபத்தான் (9)

கடலை யடைத்தோன் கடல்கடைந்தோன் கடலிற் சவரக்
கணைவிடுத்தோன்
அடர வெதிர்ந்த பெருங்குருகின் அழகை யிடர்தோன்
சகடுதைத்தோன்

இடப முயர்வெங் கனிடந்தோன் இணைமா மருதம்
பிளந்தெரிந்தோன்
படரும் கொடிய வலகை முலை பருகு மாபோ லுயிர்குடித்தோன்
(10)

ஆயர் பெருமா னெனுநந்தன் அருள்சே யசுரர் கிளையறுத்தோன்
நேய விசயன் தேர்ப்பாகன் நிறத்தாற் கரியன் றேகவிதன்
தோயு மதகுஞ் சரங்காத்தோன் துகில்பாஞ் சாலிக் கினிதளித்தோன்
சேய னிசைவேய்க் குழலூதிச் சென்றே நின்று நிரைமேய்த்தோன்.
(11)

உலக மளந்து கரந்திடந்தோன் உண்டு மகிழ்ந்தோன் சானகி பூ
தலமி னுருக்கு மணிகேள்வன் கலசத் திருமார் பின்னரவிற்
குலவி நடித்தோன் கோசலைதன் குமாரன் கஞ்ச னுடல்பிளந்தோன்
அலர வாணண் றோள்பலவும் அறிந்தோன் வாலி
தலைக்கொன்றோன்
(12)

மச்ச மெனப்போய் மறைகொணர்ந்தோன் மடங்க லுருவாய்த்
தூணிலெழுந்
தெச்ச மறவே குடர்மாலை யிட்டே யிரணி யனைவதைத்தோன்
உச்சப் பகலைத் திகிரியினால் ஒளித்தோன் பஞ்ச வர்தூதன்
மெச்சப் பெறுய சோதைசுதன் விறல்சேர் வசுதே வன்புதல்வன்.
(13)

ஆமை யுருக்கொண்டு அடைகிடந்தோன் அட்டக் கரத்தோன்
வைகுந்தன்
தீமை புரிந்த வரக்கனுடல் செகுத்தோன் தசர தன் சிறுவன்
தூயிமை யுறுபூம் பைந்துளவோன் சுரிசங் காழிப் படையன்சத்ய
வாமை கொழுநன் எனப்பிறவு மாலின் சரிதம் வழுத்துவையே

(14)

## உமையவள்

அண்ட ரண்டம் பூத்தவள்வெற் பரையன் மடந்தை யறம்வளர்த்த
கண்ட பரிபூ ரணிஞானக் கடல்மூ வரையும் பெற்றவரில்
விண்ட வுருத்திரன் தனைவேட்ட விமலி பாசாங் குசமொடுவிற்
கொண்ட கரும்பைங் கனைகைக் கொண்டா ரெமையா ளுமையாரே.

(15)

## விநாயகன்

தரைமா மருக னைங்கரத்தோன் கால்போல் வயிற்றான்
பிள்ளையார்
புரைதீர் மருப்பொன் றொடித்துமாலைப் புறத்தி லேவெம்
பாரதப்போர்
வரைவோ னிருநாற் புயனான்ற வாயான் மதியாய் சடைமுடியான்
உரைசேர் முதல்வன் விநாயகன்மெய் யுறுதி தருவோன் கணபதியே

(16)

## சுப்ரமணியன்

பரவு மிருமூன் றக்கரத்தோன் பரனுக் குபதே சம்புரிந்தோன்
விரவு மறுவர் முலையுண்டோன் வேலை சுவற வேல்விடுத்தோன்
உரவோ னாறு படைவீட்டை யுடையோ னாறு முகன்பனிரு
கரனே சரவ னோற்பவன்சூர் கணியாச் சுப்ர மணியோனே

(17)

## பிரமன்

தண்டா மரையா சனமாகந் தவளங் கோயின் மறையோரில்
வெண்டா மரையா னவனாவில் விரும்பும் பாரி சதுர்வதனங்
கண்டா மரையான் தனதுந்திக் கமலம் பிறப்புப் படைமறைநூல்
வண்டா மரைதா ரனந்துவசம் வாக னமுமாம் பிரமனுக்கே

(18)

## அட்டச்சரச்சுவதிகள்

துதிமே வுபிர மணிவாணி சொல்லா ரினிய கலைமகள்வா
ரதிகா ரதியி னுடனுறுசீ ராரும் வால பரமேகி
மதிசேர் ஞான தாரணியாய் வனசப் பொகுட்டில் வீற்றிருக்கும்
விதிசேர் பிரம னுரிமையென விளம்பு மட்டச ரச்சுவதியே

(19)

## பேரின்பம்

*தன்றத் தவக்கா யத்தியல்பும் தனக்காந் துணையு மொர்ந்துலகி*
*லொன்றக் குறிக்கும் பொன்னாசை யுன்னிட் டவற்றால் வருதுயரும்*
*துன்பப் பிறப்பு மிறப்புமிவை தொலையத் தொலையாப்*
*பொருள்குறித்துன்*
*அன்பின் செயலை யினியடியேற் கருளென் றோர்தல் பேரின்பமே.*

*(20)*

## உ ஆவது வருணாச்சிரம வொழுக்கம்

*தெருணா கரிக முகில்சுக்ரி தீர னிறைஞ்ச வருள்புரிமெய்ப்*
*பொருளாந் திருமூர்த் தியைப்பரவிப் புகலுங் கவிதை*
*பதினொன்றால்*
*அருணான் மறையோர் முதனால்வர் அடைவிற் றமதுமு*
*நெறியொழுகும்*
*வருணாச் சிரம வொழுக்கமதை வழுத்துந் தொகுப்புச்*
*சொலுகின்றோம்*

*(21)*

## பிராமணர்

*வேத முறையோ துதலோதி வித்தல் வேட்டல் வேட்பித்தல்*
*ஈத லேற்ற லிவையாறும் இசையு மறையோர் தொழிலென்ப*
*தீதி னான்காச் சிரமமுறை செப்பு மவர்க்கவ் விதிபேணி*
*யாத வனைக்கண் காணுமுனு மந்தி கண்டுங் கடனியற்றி (22)*

ஆதி வேத முதனொடங்கி யடைவே காண்டம் பகுத்தோதி
நீதி யியல்பிற பொருளறிந்த நெறிவ ழாம நிலைநின்று
வாதிற் றரும முதன்மூன்று மருவும் படிக்காம் வழியியற்றி
யோதும் பிரம மன்னுநெறி யுற்றே போகம் பொருந்துவரால்

(23)

## க்ஷத்திரர்

மனுவிக் கியான நூலோதன் மறைநூல் வழியில் வேட்டிடுத
லினிதி னீத லுலகோம்ப லேற்ற வளந்து படைதாங்கல்
சனுவிற் றக்க வகைதோல்வி தாரா தூக்கிச் சமர்விளத்த
நுனியிற் புலிவாழ் மன்னவர்க்குச் சொற்ற வாறு தொழிலாமே

(24)

பொருளைக் குறித்துச் சமயவழி போற்றித் தரும நெறிவிரும்பி
யருளிற் குழூவோ றைந்துமின மைந்து மோம்பிக் குடிதழுவித்
தெருளிற் றளர்ந்த குடிதாங்கித் தினமு நகரி சோதித்து
மருளற் றியல்பி னொழுமுண்மை மதிமந் திரிசொல் லுடன்படுத்து

(25)

சாருங் குடியை யாதரித்துஞ் சார்ந்த குடியி னீடளித்து
நேருங் கொடுமைச் செயல்விளைத்தன் னேறிகாட் டமைச்ச
ருரைமறுத்துத்
தேரு மறிவு பொறுமைகொடை திடமஞ் சாமை யெனுமிவற்றி
னோரு முலகிற் பிறவுயிர்தன் னுயிர்போற் கருதிப் பழியஞ்சி

(26)

ஆதி லொன்று குடியிறை கொண் டரிய தவத்தோர் கற்புடையோர்
தேறு நிலையா தரவமைத்து செற்றார்ச் செறுத்திக் கொயினரைக்
கூறுங் கிளகட் டாங்கறுத்துக் கொடுங்கோற் பிறர்த மனைக்காமம்
வேறு படுக்குங் கட்குறளை விரும்பா தறிஞர்க் கின்னாகி (27)

பொருவி லுயர்நூற் கவிவலர்சொற் போற்றி மறையோர்
செயல்விளக்கிப்
பெருகு கான மயின்முறைமை பிழையா தன்னத் தியல்பாகி
மருவு மனுவிற் செங்கோன்மை வழியே முறைகேட் டெவ்வுங்குங்
கருது நெறியிற் புகழை காவல் புரிவோன் காவலனே (28)

வெற்றி தருதற் குறுபடையும் விரும்புஞ் செல்வக் குடிச்செறிவு
மற்ற மறியாக் கூழ்ப்பொலிவு மறத்தைக் கருது மந்திரியும்
கற்று நீதி தெரிநட்பும் காவ லுறுநால் வகையரணு
முற்ற நீதி மன்னவ னுத்துங் கரைச்சிங் கேறே. (29)

## வைசியர்

அறிவி னோதன் மகமியற்ற லதிதிக் கியல்ப லுணவளித்தல்
உறுதி தருவா ணிபஞ்செய்தல் உவந்து தினமு நிரைகாத்தல்
செறுவி னுலவு செய்தலெனத் தெரிந்து பகரு மிவையாறும்
பொறுதி யுடைய வசியருக்குப் போந்த தொழிலாய்ப் புகலுவரே.
(30)

### பூவசியர்

வழுக்கி லொருமூ வகியரிற்பூ வசிய ரென்னும் வேளாளர்
இழுக்கில் வேதா கமப்பகுதி யியைபின் வேத சித்தாந்த
வொழுக்கின் வழிநான் காச்சிரமத் துயர்சற் குருவ
ராற்மொருடேர்ந்
தழுக்கின் மெய்யன் பிற்றினமு மரிச்சித் தரிய பதமடைவார். (31)

### சூத்திரர்

பகர்பூ வசியர் தொழிலான பாவை யோம்பல் பொருளீட்டல்
புகரி லுழவு தொழிலியற்றல் போற்று மறையோர்க் கேவல்செய்
னிகழ்விற் குயிலு வத்தொழிலி னிலைதேர்ந் திசைவி
னியற்றிடுதல்
அகலில் காரு கத்தொழிற்கா ளாதல் சூத்திரர்க் கறுதொழிலே
(32)

## (3) ங ஆவது இராசசின்னம்

உயர்வான் பரவு மொருமுதலை யுன்னிக் கவிதை பதின்மூன்றிற்
செயவேந் தரும்வந் தெதிர்போற்றுந் தீர னெத்து வேந்தர்துரை
வயமா யரசு செய்சுக்ரி மகிப னுரைக்கு நெறிமனுவி
லியல்பா யுலகம் புரந்தருளு மிராச சின்ன மியம்பலுற்றாம்.

(33)

சொல்லு மந்திரி புரோகிதர்நற் றூதர் சேணா பதியொற்றார்
ஞல்லு மரச ரைங்குழுவென் றுரைக்கு மடுத்த நட்பாளர்
வெல்லு மந்த ணாளர்படை வீரர் நிமித்த காரரொடு
புல்லு மாயுள் வேதியராம் பொருநர்க் கோது மைந்திறமே (34)

## மந்திரி இலக்கணம்

தேர்ந்து செயற்பா லவையியற்ற றெரிந்து விவகா ரம்பரித்துக்
கூர்ந்து பொருத்திக் கோடலதின் குற்றம் நீக்கிக் குணம்பேணல்
தேர்ந்து குடிகாத் துலகோம்ப னெறியி லொன்னார் குறும்பறுத்த
லோர்ந்தி ராசன் மதிக்கிணங்க வுன்னிச் சொல்வோன் மந்திரியே
(35)

## தளகர்த்தனிலக்கணம்

உளத்தின் மாற்றார் வலிகாலம் உறுதன் வலிசீர் தூக்கியமரக்
களத்தி லாசைப் பேணிமுனை காட்டிச் செருனர் தமைவெல்லும்
வளத்திற் படைத்த லைவரொடுநால் வகைச்சே னையுஞ்
சூட்சித்தினிது
தளத்தை யோம்பிப் படைக்குமுன்போய்ச் சதுர்செய் பவனாந்
தளகர்த்தனே (36)

## பிரதானி இலக்கணம்

சதிரி னுறுசீர் மையுங்குடியுந் தனமு மைந்து திரவியமும்
பதிவி னாற்கூ றியற்றிடுநாற் படையும் பேணி யூகித்து
மதியின் வேந்த னுரைதழுவி வகுக்கும் கரும முறைதெரிந்து
திதியின் பரவுந் தன்முகமாய்த் திட்டம் செய்வோன் பிரதானி

(37)

## தானாபதி இலக்கணம்

சீலந் தகுசொல் வன்மையவைத் திறன்வேந் தியற்கை
யுணர்ந்தறிவிற்
காலங் கருதி யிடனறிந்து கருமம் விடாமல் விவகார
மூலந் தெரிந்து சோர்வுபடா மொழியி லுறுதி தரினுமனு
கூலங் கருதிச் சந்திசையைக் கூறு வோன்றா னாபதியே (38)

## அட்ட இலக்குமி

மறுவி லாப்பாக் கியங்கல்வி மகிழ்ந்து தவுதா னம்வீரம்
உறுதி பயக்கும் திடம் விசையம் ஓங்கு நலமாய் சந்தானஞ்
சறுவ சாம்பிராச் சியமென்று தக்கார் புகலு மனுநீதி
பெறுத்த சாங்கத் ததிபனுறப் பேணு மட்ட விலக்குமியே (39)

பாக்கிய மிலங்கு முகங்கல்வி பரவு நாவிற் ருனங்கை
தாக்கு வீரம் புயநெஞ்சிற் றைரியம் வாண்மு லைவிசைய
மாக்கும் பெருமைச் சந்தானம் மணிவேர் வயது புவியணியத்
தேக்குஞ் சருவ காம்பிராச்சியந் திரண்ட வூகுப் பேருமன்றே

(40)

## அரசயானை இலக்கணம்

கைகால் கோச நிலத்துறைநான் காறும் பொலிவி
லுகிர்வெளுப்பாயித்
தவ்வா தேழு முழமுயர்ந்து தகுபன் மூன்று முழச்சுற்றி
னொவ்வாக் குழிமத் தகம்வாய்ந் துயர்ந்த முன்பாயிப் பின்பணிந்த
செவ்வா யேந்து கொம்பின்முறச் செவியா ரியமன் னவர்க்காமே.

(41)

கம்பு ரிசைநி களமுதல் கவுளின் சுவடு புழைத்தடக்கை
கும்ப நால்வாய் தலைசெவியால் குசம்பொற் புகர்மு கம்கவளம்
கிம்புரி வெண்கட ரிகுபருப்புக் கிளர்செங் கனற்கண்
கவையடிமால்
வெம்புஞ் சினங்கொல் லுயிரினவாம் விரித்த யானைக்
கடைச்சொல்லே

(42)

## பரி இலக்கணம்

மாதர் மனதை நிகர்மனதாய் வாய்த்த நிறத்தைங் கதியுடைத்தாய்
தீதி பாத சுழியுடைதாய் திருக்கி லாநற் குணத்தினதாய்
ஓது மெழுகாண் மைதீபெறு முயர்விற் கதலி மடற்செவியாய்
பாத முன்பின் விருத்தியுமாய்ப் பகர்மன் னவர்க்காம் பரியியல்பே.

*(43)*

மாவின் றளிர்போல் ஒளிர்நோக்கு மலிவெண் ணுரைபொங்
கியவாயும்
பாவு தரளந் தாமரைபொன் பச்சை நீல நிறத்தொன்ற
மோய்வி லிடப மத்தனஞ்சங் குவரித் திரைமே கத்தொனியிற்
கூவு சத்து மவற்றொன்றாய்க் குறிக்கப் பெறுமவ் வாம்பரிக்கே

*(44)*

## நாடு நகர் காடு கடல் மலைபடு மைந்திரவியங்கள்

நாடு கூதலி கழைசெந்நெல் நறுஞ்செங் கழுநீர் சிறுபயிறு
மாடி பித்தன் காரானை யரசன் யூக நிகரினவாங்
காடு நாவி மயிற்பீலி கருதுஞ் சவரி தேனரங்காங்
கோடு பவள மூவர்க்குக் குலவெண் முத்தங் கடலினவே

*(45)

கோட்ட மகில்குங் குமங்கறிதக் கோல மலையி னவைந்தா
யீட்ட லிசையுந் திரவியங்க ளியம்பு மரசர்க் குறித்தென்ப
சோட்டு மலையு யர்மதிலுஞ் சுரமு மிருதண் புனலுமென
வாட்டி லட்ட மங்கலத்தான் வழுத்து மன்னர்க் கரணான்கே.

(46)

## (4). ச. ஆவது காமசின்னம்

பொருவல் லசுரர் புரமூன்றும் பொடிசெய் திடும்வாண் கைக்குரிசி
லிருபொற் பதத்தைப் பணிந்திறைஞ்சி யியம்புங் கவிதை
பன்னிரண்டாற்
றருவை நிகர்சுக் கிரிமகிபன் தனது வடிவின் செயல்போலும்
உருவம் விரும்புங் காமசின்னம் ஓதுந் தொகுப்ப துரைசெய்வாம்.

(47)

## காமனது யானை முதலியன

இரதம் வசந்தன் மதயானை யிரவாம் பூவை பசுங்கிள்ளை
புரவி படைமஸ் கையர்வாசம் பொலியு மிணர்பொன் பூஞ்சேரிய
பரவு படைவீ டாமுரசு பரந்த கடலலாங் கொடிமகர
முரவு மன்றி லவன்காள முயர்வெண் குடையிந் தனங்கனுக்கே

(48)

சொன்ன குடைக்கான் மதிக்கிரணஞ் சுரிமென் குழலார் பூசுவன
வுன்னும் வதுவை யவன்பரிசை யோங்கித் தளிர்க்கும்
பெருகிலையாஞ்
சின்ன மன்றில் குயில்கூவுற் தேரி னுருள்சந் தனச்சானை
யென்னு நறுமாந் தளிர்பட்டா வெழிற்கை சாமா தளம்பூவே

*(49)*

வெல்லு மதனன் றனிமார்பில் விளங்கு மாலை யிலஞ்சிமஞ்சுட்
புல்லுங் கழுகி னுறும்யானை பொற்பா யிலுட்டுஞ் சாமரையாஞ்
செல்லு மவன்கா ளாஞ்சியலர் செண்பக மென்மல் லிகைவாகைச்
சொல்லும் வேனி லவன்திருநா ளுடைவா ளோலைப் பூவாமே

*(50)*

பழிக்கு மதனன் பரிக்கலனைப் பன்னு நறும்பூ மல்லிகையக்
கழிக்கு மிலஞ்சிக் கடிவாற கன்னச் சல்லி புனையம்பூ
மதிக்கு மவன்மெய் யீடுகவச மலிந்த விரைதோ ழன்வசந்தன்
விதிக்குப் பினவன் தேர்ப்பாகன் விரும்பும் வசந்த னெனலாமே

*(51)*

அல்லி யீட்டி வாழைபாலை யடர்காங் கட்க மதன்றண்டு
வெல்லுந் தண்டா யுதமாகு வேட்டுந் தேவ தாரியொடு
புல்லு மிரதி யெனவிடுபேர் போந்த மனையார் மாரனுக்குச்
சொல்லும் காம்ப னென்பவனே துணையாந் தம்பி யெனலாமே.

(52)

கதிர்பிபூம் பச்சைத் தண்டும்வெறி கமுகம் பசிய மாந்தண்டு
மதுக்கொண் டலர வழிந்தொழுகு வாச முறுமல் லிகைத்தண்டுந்
துதிக்குங் கருப்பந் தண்டுமளி சூழுங் கமலப் பூந்தண்டும்
விதுத்தண் குடையா னெடுத்த பஞ்ச வில்லென் னுணர்ந்தோர்
சொல்வாரே. (53)

பிச்சிக் கொம்பு மடலவிழ்க்கும் பிரச நறுந்தா மரைநூறு
மெச்சப் பொலிவின் மணம்வீசும் வெட்டி வேரும் சார்வண்டும்
பச்சப் பசுமாந் தளிரெனவே பகர்ந்த தனுக்க ளைத்தினுக்கு
மச்சக் கொடியோன் பூட்டியநாண் வகையைந் தென்பார்
தகவுடையோர் (54)

சொற்றார் நறுமுல் லைபூவுந் தூய சோகம் பூவுமிகக்
கற்றார் புகழு மாம்பூவுங் கடிசேர் தண்டா மரைப்பூவு

பொற்பா யலர்நீ லப்பூவும் போரின் மதவேள் செய்கையினால்
பற்றாத் தொடுத்து நின்றெய்யும் பஞ்ச பாணத் தடைவினவே
(55)

சிரசின் முல்லை நேத்திரத்திற் திகழ சோகு தளமீது
விரவு லுதமார் பின்கண் விளங்கு முளரி வயங்குபொறி
யரவு படத்தி னறுநீல மணுக சமரிற் குறிநோக்கி
யுரவே ளைந்து கணையெய்தற் குற்ற தான மைந்தாமே (56)

ஏற்ற முல்லை கிடைகாட்டு மெதிர்ந்த சோகு சென்றுபல
தோற்றுங் காட்டிக் கடைபொருந்தாச் சூத முடலிற் பசலைதரும்
தோற்ற முறுசெந் தாமரைப்பூச் சிந்தை யார நினைவுயர்க்குங்
கூற்ற மனைய நறுநீலங் கொலும்வே ளம்பின் குணமைந்தே
(57)

மனதின் மோகஞ் சனித்தவுடன் மதனும் விரைவின்
மனோபவமாய்த்
தனது சொருப மருவமெனுந் தன்மை தோன்ற மெய்பொலிந்து
சினவி யெழும்புஞ் சன்னதமாய்ச் சிலையைக் குணித்து நாண்பூட்டி
யினமென் றும்பூங் கணைகடொடுத் தெய்து பூசல் செய்வாளே
(58)

மலையார் களப முலையாகு மால்மோ கினிவா வியுங்காவுந்
தலையார் நாடூர் மகிழ்மாலை தாண்டும் பரிபூங் கிளிகயிறு
நிலையார் கங்குன் முரசுகட நெடியது வசங்க யல்கருப்பஞ்
சிலையார் மலரா லியாரையுந்தன் செயலி லிடக்கு மானையினான்

*(59)*

## (5) ரு ஆவது எழு வகைப் பெண் பருவம்

எருவ னுபய பதம் போற்றி யுருவ முறுமெய்க் குணஞ்செய்கை
மருவும் வயது பிறவுமுலி வகுத்துத் தரும்வா ருகவமைத்து
இருபது டன்னா ரிரண்டு செய்யுள் இசையுந் தொகையுள்
எழுவகைப்பெண்
பருவ முறையாய்த் தனித்தனியே பன்னுந் தொகுப்புப்
பகிர்கின்றாம் *(60)*

## பேதைப் பருவம்

கூவத் தெரியாக் குயிற்பேடு குதலை பிதற்று மென்மொழியாண்
மேவச் சிறுவீ டிழைத்துமகார் விரும்புஞ் சிறுசோ றடுங்கருத்தாள்
பூவற் சிலைவே ளரண்மனையை பூட்டுந் தகைமை யங்குலினாந்
ஆவற் பயிலா வடிவுடையாள் அடர்பொற் பாவை
விளையாட்டாள்.

*(61)*

கயலிற் காலம் பார்த்தடங்கும் கடல்கொள் ளாநஞ் சனைவிழியாள்
பெயலை விழிநீர் சுழித்தாழ்ந்த பெற்றி போள்வட் டக்குறியாய
வியல்கொள் வெய்யி லிற்கனலும் வித்தின் முளையு
முடங்குதல்போ
லியல்பின் மார்பத் தடங்குதனத் திரச முற்றா விளங்கரும்பூ
(62)

போற்றுந் திருட்டி முதன்மூன்றும் பொலிவித் தப்பாற் புகர்ச்சிருட்டி
தேற்று நகையா ளனப்பார்ப்பு தீஞ்சொற் பழக வருங்கிள்ளை
காற்றி னடிபட் டயர்வுற்ற கனஞ்சேர் குழல்சூ ழியத்தியனாள்
பாற்றுஞ் சஞ்சீ வினிக்கின்றாம் பருவப் பேதைப் பசுங்கிளியே
(63)

## பெதும்பைப் பருவம்

சுத்த சுரம்பா டத்தொடங்கும் தருண மொழியாள் புயல்கண்டு
பத்தி குலவ வந்தமயில் பழகப் பார்க்கு நடையன்ன
முத்தை நிகர்த்த மூரலினான் முனைநஞ் சொவ்வ விற்கணைநாண்
வைத்து வளைத்த வளைகண்ணான் மதனை யெழுதும்
விளையாடாள்
(64)

ஈட்டும் பத்தா யம்புகுது மெலிபோம் வழிபார்ப் பதுபோல
மூட்டுங் காம வழிதேடி மூட்டிப் பார்க்கும் அங்குலினாள்
பூட்டு மைய மயற்கருத்தாள் பூக்குந் தருணப் பூங்கொடியாள்
கூட்டுஞ் சொருகு குழகற்றோர் கல்லா ரிடத்தில் கல்பனையாள்
(65)

அன்னம் போலுமென் னடையாள் அறங்கா ரனைய குழற்சொருக்கும்
பின்ன லுடையாண் முகைவிரிக்கும் பிரச நறுபூங் கொடியாள்விற்
கன்ன லுடையான் தனக்காண்மை காட்டும் வடிவாள் காமவிடா
யின்ன றீர்க்குஞ் சஞ்சீவி யினிக்கு மரச தாளிக்கரும்பு (66)

நாடி ரதிமோ கனப்பட்ட நயந்து சூட்டும் பருவத்தாள்
சேடி மார்நின் றலங்கரிக்கத் திகைக்கு மிடையாள் பணந்தாழ்ந்த
கோடி யரவு மவாவியலர் கோக னகத்தின் இதழுமிணை
பாட லிசையு மல்குலுறு பருவ மங்கை திருவினளே (67)

ஆர்த்த மதவேள் கூடாரத் தாதா ரம்போ லடிக்கொண்டு
கூத்துச் சமைந்தோர் திரைநின்று குறிப்பின் முகங்காட் டுதலெனவே
காத்த மருமத் துற்றுமுகங் காட்டு மிலந்தைக் கனிமுலையாள்
பார்த்து முயங்க நாட்கொள்ளும் பருவப் பெதும்பைப் பதுமினியே.
(68)

## மங்கைப் பருவம்

வேனிற் கண்டு கூவிகுயில் வீசும் வாணஞ் செனும்விழியாள்
கானிற் புயல்கண் டாடுமயில் களித்துப் பூவைக் குரைகூட்டுந்
தேனிற் பொலிந்த மென்மொழியாள் சிமிழ்நீர்க் குமிழி நிகர்ப்பருவ
மானித் திருக்கும் பூண்முலையாண் மயறந் தணைக்கு
மருக்கொழுந்து
(69)

## மடந்தைப் பருவம்

தேயிந்த பிறையை நிகர்நுதலாட் டேங்கா யிளநீர் பொற்கலச
மாய்ந்து மதன்செங் கோல்செலுத்தி யரசு புரிதற் கனிமகுடம்
வாய்ந்த முலையா ளிருதோட்டு வழிபோய்ப் பாயு
மான்விழியாள்
தோய்ந்து கலவித் தொழில்பழகுஞ் சுரத காமக் கலைஞானி
(70)

சரச மொழியி னாள்விரக தாபந் தணிக்கு மதுமாலை
பரவு மனத்துக் தினியநடை பயிற்றிக் காட்டு மென்னடையாள்
உரவி லனுக்கு மிசைதொழிலாள் உவக்கு மணியிற் கணியன்னாள்
விரவு நடுநா யகமென்ன விளங்கும் பருவப் பெண்ணரசு (71)

சேரத் துவள மின்னிடையாள் தெளியப் பழகு பணிப்படமும்
பாரச் சிலைவே ளரண்மனையும் பசும்பொற் றட்டும் பரிச்செவியு
நேரச் செறியு மல்குலினா ளெய்த்துத் தகர மாரமணம்
வாரச் சொருகுஞ் சொருக்குடையாண் மடந்தைப் பருவ மாதினளே

(72)

## அரிவைப் பருவம்

கடந்த மோனத் தருத்தவரும் கண்டான் மயங்கும் பிடிநடையாள்
தடந்தேர்ந் தட்டினி தம்பமுறு தகவி னாள்சிற் றெறும்பொழுக்கின்
படர்ந்த ரோமத் தொழுங்கினள்செம் பதுமப் பூத்த
கொடியிடையாள்
அடர்ந்து காமச் சலராசி யாரத் தழுவு மாசையினாள்

(73)

துஞ்சு கயலுஞ் சேலுமெனச் சுழலும் விழியாள் பொன்மலைபோ
லெஞ்ச லில்லா தடர்ந்தெதிர்கொண் டிணைத்து விம்மி
மிசைபார்க்குங்
குஞ்ச ரத்தி னிருகோடு குறிக்கும் மேந்து கொங்கையினாள்
விஞ்சை மதனூல் வழிகாண விதம்பா ராட்டு மதியுடையாள்.

(74)

வீரச் சிலைவேள் குருபீடம் விந்தைக் குழைச்சு கூந்தலினாள்
சேரச் சேரத் தெவிட்டாது சித்தத் தினிக்கும் தேன்பாகு
மாரற் இனிய கருவூலம் வழுத்தும் வீணை யிசைத்தொழிலாள்
ஆரப் பண்பு தருமொழியாள் அரிவைப் பருவத் தணங்கினளே

(75)

## தெரிவைப் பருவம்

சீராய்க் குலவும் பிடிக்குநடை திருத்திக் காட்டு மெழிநடையாள்
நேராய்த் துவளுங் கேசரிபோ நிகழ்த்து மருங்குற் பனிமொழியாள்
பாரர் ரிளைஞ ரிருதயமும் பனிமுல் லையுமா ரச்சொருகிக்
காரார் புயல்மீன் காட்டுதல்போற் காட்டும் பலினக் கருங்குழலாள்

(76)

நலங்கொள் ளமுது நஞ்சுமிணை நவிலும் விழியாள் துமறுப்போ
யிலங்கு மிவடன் முகச்செவ்வி யிசைய மருந்து தேடிநிதத்
தலங்கொண் மேரு வலங்கொள்ளத் தயங்குஞ் செந்தா
மரைமுகத்தாள்
துலங்குந் தெண்ணீர் பருகுமதத் தும்பிக் கோட்டு சரிமுலையாள்

(77)

புடத்தாற் றெளியு மரபஞ்சிய பொன்போ லொளிரு மேனியாள்சூ
திடத்திற் பொலியும் விளையாட்டா ளெழுதேன் கூவற் கடிதடத்தா
ளடத்திற் குலவு சிற்றிடையா ளயந்து காம நூற்பகுத்துத்
திடத்திற் காண முழுதுமுணர் தெரிவைப் பருவச் சேயிழையே

(78)

## பேரிளம் பெண் பருவம்

அட்ட கிரியும் வென்றடக்கி யப்பால் விந்தைக் கிரியினையுந்
திட்ட முடனே வென்றரசு செலுத்தப் பார்க்கும் இருதனத்தாள்
வட்ட முறுதன் முகச்சந்த்ர மதிக்குப் போதா தெனக்கருதி
யிட்ட நிலவு பிறையணியா ளிரண்டு விழியு மமுதமன்னாள்

(79)

பரிவி லணிகா லணியவைகாற் பணியென் றணியாள் சிலைக்காமன்
வெருவு நடையாள் மழைக்கான்று விட்ட வெழிலிச் சிகழிகையாள்
ஒருசங் கையினா லிருசங்கை யுற்று நாற்சங் கையுமிசையாள்
தெரியுங் காம நூன்மடவார் சிந்தைக் குணர்ந்துஞ் செய்கையினாள்

(80)

ஆலும் பரத விதிமகளிர்க் கறிவு பயிற்றுங் குருவனையாள்
கோலுந் தரும நினைவுமின்சொற் குறிப்பிற் பயிலும் பசப்புமுறச்
சாலு நெறியாள் பரந்தமுதந் ததும்பும் வாவிக் கடித்தடத்தா
ளேலு நிகரி லிடையினள்பே ரிளம்பெண் பருவத் தேந்திழையே
(81)

## மேற்கூறிப் போந்த பருவங்கட்கு

## எய்தி வாண்டு

தலைவன் போது முலாவீதி சார்ந்து கண்டு தொழிற்கிசையு
மிலையம் பழகும் பேதைமுத லேழு பருவக் குணந்தருமாண்
டுலைவி லேழ்பன் னொன்றுபன் மூன்றா துபதிற் றொன்பானையந்
தலைவி லாறைந் தொன்றெலைந்தா யடைவி லுணர்ந்தோ
ரருளினரே. (82)

## (6) சா. ஆவது ஏழுவகையாண் பருவம்

சகமுந் திசையு முயர்செம்பொற் சயிலப் பொருப்பும் நெடுங்கடலும்
துகம துறவுந் தியிலடக்குந் தோகை பாக னடிதொழுது
புகழு முறையிற் பருவமொடு போந்த வயது மொருகவியற்
பகரும் விதமாய் எழுவகையாண் பருவத் தொகுப்பை
யறைகின்றோம்.
(83)

உன்னு பாலன் மீறிமற வோனே திறவோன் காளையொடு
பன்னும் விடலை முதுமகனான் பருவ மேழா மென்பரிவை
மன்னு மாண்டே ழீரைந்து வருமீ ரேழு மூவைந்து
துன்னு மீரெட் டையாறு சொல்லு மாறெட் டடைவினவே.

(84)

## (7) எ. ஆவது ஏழுவகையாண் பருவம்

இருந்தா கமமு மாரணமு மியல்பு மிறைவ னடிபோற்றிப்
பொருந்தாக் காமச் செயன்னான்கும் பொருந்துங் காமச்
செயலொன்றுந்
திருந்தா லொருத லைக்காமச் செயலோர் மூன்று மாய்விதந்து
வருந்தா தேழு கவிதையிலெண் வகைசேர் மணம தியம்பலுற்றாம்.

(85)

சதிரால் வழங்கும் பிரம்மபிர சாபத் தியமா ரிடந்தெய்வ
மெதிர்சேர் காந்தி ருவமசுர மிராக் கதம்பை சாசமென
விதிகூர் மணமெட் டாமிவற்றின் விளம்பும் பிரம முதனான்கு
மதியார் பொருந்தாக் காமமிரு மனதும் பொருந்தா மணமாமே.

(86)

## க. பிரமம்

ஒத்த குலத்தி லாண்டாறெட் குற்ற பிரம சாரியார்க்குப்
பத்தி பெறுமா றிரண்டாண்டை பருவக் கன்னி தலைப்பூப்போய்
நத்து மிரண்டாம் பூவருமுன் னாரிக் கிசையு மணியிட்டுத்
தெத்தங் கொடுத்தங் பிரமமென செப்பும் வேத நெறியாமே

(87)

## பிரசாபத்தியம் - ஆரிடம்

குலத்து ளூரியோன் வேட்பதற்குக் கொடுத்த பரிசத் தினுக்கிரட்டி
பலத்திற் கொடுத்து விடற்பிரசா பத்தியங் கோடு
குளம்புபொன்னால்
நலத்திற் செய்த புனைந்தாச்சே நடுவணி வரைவ ணிசெய்நறீஇ
நிலத்தி லிவைபோல் வாழ்த்திரென நீராற் கொடுத்த லாரிடமே

(88)

## தெய்வ மணம்

தொக்க மறையி னியல்புணர்ந்து சொற்ற படிக்கவ் விதிபேணித்
தக்க விதியின் மகம்கேட்போர் தம்மி லொருவன் தனைவரித்து
மிக்க விதிநூன் செயலாக விரும்பு மவர்க்கவ் வேள்விமுறை
தெக்க ணயதா மகட்கொடுத்தல் தெய்வ மெனவே புகழ்வோரே

(89)

## காந்தருவ மணம்

இனமாய் வருகைக் கிளைநான்கி லிருவர் மனமு மைந்திணையும்
கனமாய்ப் பொருத்துங் காமமது காந்திரு வமென்னு மணமாகும்
தனமா யிருவர் தம்மிலொரு தலையார் காம முறச்சேர்த்துப்
பனமாய் விரும்பு மணங்கைக்கிளை பன்னு மசுர முதன்மூன்றே

(90)

## அசுரம்

அகன்ற வசுர மணம்பகையை யடர்த்து ரத்தி யுரமீறுந்
திகழ்ந்த திமிலேற் றினையொருங்கச் சேர்த்துத் திரிபின் றிப்பெய்து
சகங்க டுதிப்ப வெதிரென்று தயங்கு பலத்திற் றனுவளைத்து
புகன்ற சபதம் முடித்ததிறம் போற்றித் தமது மகட்கொடுத்தல்

(91)

## இராக்கதம் - பைசாசம்

தலைவி யிசைவி னன்றிவரு தமர்க ளிசைவி னன்றியுமே
வலைவிற் கொளலி ராக்கதத்தின் மணம்பை சாசம் மணமியம்பிற்
றொலைவின் மூத்தோர் களித்தோர் கண் குயின்றோர் பயந்தோர் கலைமாற
லலையின் மயக்கிற் றனிமையினி லலது மிழ்ந்தோர்ச் சேர்தலுமே

(92)

## (8) அ. ஆவது புணர்ச்சி வகை

திரங்கொண் டிருந்த கயிலையினைச் சென்றோ ராக்க னெடுப்பவுட
னுரங்கொண் டலர வினுதியொன் றூன்றி யடர்ந்தோன் றாட்பரவி
முரண்பெ றாத கவிநான்கின் முயங்குந் தலைவன் தலைவியொடு
மிரண்டு பகுப்பி லறுவகையா யிசையும் புணர்ச்சி வகைசொல்வாம்

(93)

மெச்சு பெருமை யுரன்றலைவன் மேவ லாலு நாணமட
மச்ச மியம்பிற் றலைவிதனக் கமைத லாலு மிருவருளத்
திச்சைக் கவர வுயிருழுந்தி யிசையும் புணர்வுள் ளப்புணர்ப்பி
னச்சி யவத்தை யிருவருக்கு நண்ணு வதுமெய் யுறுபுணர்ப்பே

(94)

இயற்கைப் புணர்ச்சி யிடந்தலைப்பா டேத்தும் பாங்கற்
கூட்டமொழி
நயத்திற் பாங்கி யற்கூட்ட நான்குங் களவிற் புணர்ச்சியவாம்
வயத்திற் குரவி ராற்புணர்தல் வாயி லாற்சென் றுடன்புணர்தல்
செயற்கைப் படுமிப் புணர்விரண்டுந் தெரிந்த கற்பிற்
புணர்வதுவே.

(95)

களவு கற்பா மிருகைக்கோள் கருதிற் களவூழ்க் காரணமா
யளவி லுளமாண் பொத்திருவ ரறிந்த காமப் புணர்ப்பாகும்
வளமை தரவூழ்க் காரணமாய் வழங்கு முலக நடையியல்பிற்
புளக முலையா டனைவிரும்பிப் புணர்தல் கற்பிற் புணர்வாமே.

(96)

இன்பத் தலைவி தன்விரகத் தியல்பு மதனம் புலியன்றி
றென்றற் பிறவா கியபகையின் றிறனு மவள்வாட் டமுமென்று
நன்றிற் பாங்கி முதற்றூது நவின்று தலைவன் றனக்குரைப்ப
அன்பிற் குரிய தலைவசென்று அணைதற் பிறவுஞ் சிற்றின்பம்

(97)

## (9) கூ. ஆவது. புணர்தற் குறி

திணைத்திற் சிறந்த காமாரி திருத்தாட் பணிந்து சாத்துவித
குணத்தைப் பெறுசுக் கிரிதீரன் குவளம் வரைமின் னார்போல
மணத்திற் குரிய தலைவனொடு மகிழ்ந்து தலைவி புணர்ந்திருக்கும்
புணர்தற் குறியின் செய்கைதனைப் போந்த கவியைந்
தாலுரைப்பாம்.

(98)

புகழ்ந்தா பரணர் தரித்துநுதற் பூட்டும் வசியத் திலதமிட்டு
சுகந்தா திகண்மென் குழற்கணிந்து தொய்யி லிருபூண்
முலைக்கெழுதித்
திகழ்ந்தார் நறுஞ்செங் குங்குமப்பூ திமிர்ந்தே மலர்த்தாட்
கலத்தகமும்
நிகழ்ந்தே யிலகப் புழுகுபனி நீராற் சாந்து முடற்பூசி (99)

வண்ண மகளிர் அலங்கரிப்பு மதன னுறவு முண்டாட்டி
னண்ணு மனமுங் கிளிபூவை நவிலு மின்சொற் ககமகிழ்வு
முண்ணும் பாலோ தனவிருப்பு முற்ற கேள்வ னொடுமகிழ
விண்ணின் மதிதென் றலைவேட்டு வீணைப் பயில்வின்
வீற்றிருப்பும் (100)

பாங்கு நிமிரும் பூங்காவின் படிசேர் மலர்வா விக்கரையி
லோங்கு தென்ற வசையுமுன்றி லுயர்பொற் சிகர மாடத்திற்
றூங்கு மூஞ்சற் செய்குன்றிற் றுலங்குஞ் சித்ர மண்டபத்தில்
வீங்கு வேண்டு மிடத்திலினி தியன்ற சிங்கா சனக்கட்டில் (101)

மிசையிற் பஞ்ச சயனத்தின் மீது விரைசேர் மலரினங்க
ணசையிற் காம்பு கொய்துபெய்து நறுமெல் லியவெண் மடியதன்மே

லிசைய விரித்துப் பட்டொருகு மெழிற்கொட் டைகளும்
பரப்பிமஞ்ச
மசைய மேற்கொண் டிருந்துசுரு ளஞ்சு மணத்தொ டெதிர்மாறி
*(102)*

அருந்திச் சரச கவிபடிக்க வணங்க னாவே சங்கதித்து
விருந்தி னுபரிக் கொக்கோக விதத்திற் கொங்கை குலுங்கவிடை
வருந்தித் துவளப் புட்குரலும் வகுத்த தாட னமுமுழங்கப்
பொருந்தி மகிழ்ந னொடுகுலவிப் புணர்தற் குரிய குறிப்பாமே
*(103)*

## (10) க0 ஆவது பிரிவின் வகை

ஆறு மாறு மருக்கொழுந்தும் அணிந்த சடையா னுமையையொரு
கூறு மேவி யுலகருளுங் கோமா னடியைப் பணிந்தேத்தி
மீறு மிருகை கோட்பகுப்பில் வினவு கவிதை யீரிரண்டாய்த்
தேறு பிரிவின் வகையினது செயலை விதந்து கூறலுற்றாம்
*(104)*

மருவி யொருவ ழிப்பிரிதன் மையலு டனேவ ரைவிடைவைத்
துருகு மன்பி னுறுகேள்வ னுவந்து பொருள்வ யிற்பிரிதல்
பெருகு மியல்பின் வாசங்கள் பிறக்கப் பாடுந் தமிழ்வல்லோர்
கருது நெறியிற் கட்டுரைத்த களவிற் பிரித லிருவகைத்தே (105)

துணிவிற் பரத்தை யிற்பிரிதல் தூதிற் பிரிதின் மதிகூர்ந்து
பணிவிற் கலவி யிற்பிரிதல் பரிந்து காவ லிற்பிரிதல்
திணிதி னுதவி யிற்பிரிதல் றேரும் பொருள்வ யிற்பிரிதல்
கணித மறுமோ கந்தலைவன் கற்பின் பிரித லறுவகைத்தே (106)

## (11) கக. ஆவது பெண் விரகம்

உலக மியாவு மொருமுதலா யுயிருக் குயிராய் நிறைந்தோங்கு
மலகில் சோதி வடிவான்சே வடிவை யிறைஞ்சி கவிநான்கிற்
குலவு மதனும் இரதியும்போற் கொஞ்சி யணையு முயர்த்தலைவன்
விலகும் போது தனித்துறுபெண் விரக முறுமா றியம்பலுற்றாம்
(107)

தளவார் நகையார் விரகத்திற் றயங்கும் தருமு கம்பிரித
லளகஞ் சரித லுத்தரிக மகற லுடுத்த துகில்சோர்தல்
வளைகள் சிதற னாணழிதன் மடலூர் தற்கு மனந்துணிதல்
புளக முலைலொற் பசலைகொண்டு பொருும லணைமுட்
போற்றிடுதல் (108)

கரவாய் நினைதன் மெய்வெளிறல் கருத்து ளடங்கா துயருறக்கண்
விரவாத் துயினெட் டுயிர்ப்பிரிதல் வகுப்புக் கூட லிழைத்தயர்தல்
பரவா ரோமப் பொலிவொடொத்த பாவை யார்சொல்
வசைக்கிரங்க
லுரவா நகுந யமறைந்த லுண்ணும் பாலோ தனச்சைத்தல்
(109)

பதிவா யுருவி னொளிநோக்கிப் பணிந்து பரித வித்தல்கலை
மதிவேள் சசிபு கார்கடல்கான் மந்தா நிலைமற் றிவற்றினொடு
மெதிர்கண் டிரந்து புலம்புறங்கை யிரண்டு மிசைய மேலெடுத்தல்
துதிசேர் அல்கு றனவைருடற் சோர்விற் காம சலம்பெருகல்
(110)

வீசும் விரகாக் கினியினுதல் வியர்த்த லணிமுத் தம்பொருத்தல்
ஊசல் கழங்கம் மனைவிளையாட் டுன்னாக் கிடைமெய்
யணிதிருத்தல்
மாசி னுடையைப் பெயர்த்துடுத்தன் மயங்கிப் பிதற்றித்
தனியிருக்கை
கூசி மேனி நடுங்கலெனக் கூறு மவத்தை யுடையாளே
(111)

## (12) கஉ, ஆவது புருட விரகம்

கணமு மடியா குளம்பிரியாக் கருணை மூர்த்தி நளினபத
மணவு நினைவாற் றொழுதேத்தி யருளுங் கவிதை யொன்றிலுற
மணமெல் லியபூ வணையினக மகிழ்ந்து தினமுங் கலந்தினிது
புணருந் தலைவி தனைப்பிரியும் புருட விரகச் செயலுரைப்பாம்
(112)

காண்டல் வேட்கை சிந்தித்தல் கசிவின் மெலிதல் மெலிவாதல்
ஈண்ட வயலுக் கியம்புதனா ணிழைத்தல் காணு மவையெல்லாந்
தூண்டு மனதின் குறிக்கேற்கத் தோன்றல் பிதற்றல் மோகித்தல்
மீண்டு மாழ்க லிவைபுருட விரக அவத்தை பத்தாமே
(113)

## (13) கங. ஆவது விரகப் பெண் பகை

விண்ணு மகன்ற புவியனைத்தும் விளங்கும் புகழ்சுக் கிரிமகபன்
கண்ணு மனதுங் குடியிருந்து காக்குந் திருமூர்த் தியைப்பரவி
யெண்ணுங் கவிதை யோரைந்தா லியம்பு முறைமை யால்விரகப்
பெண்ணின் பகைதா மிவையென்று பேணி விதந்து கூறுகின்றோம்.
(114)

முத்துக் களப மருக்கொழுந்து முல்லைப் பிச்சி முதலாம்பூந்
தொத்துக் கதலி கடலாம்பல் சூழுங் குளிரும் பூம்பாயல்
நத்து கவிய வடர்கங்குலி னறுந்தண் பனிநீ ரிவைபத்தும்
பித்துப் பொலிய வரும்விரகப் பெண்ணின் பகையென்
றெண்ணுவையே.

(115)

இலங்கு பணியும் பைந்தொடியு மிசைந்த கொங்கைக் கணிகச்சுந்
துலங்கு முத்து வடமொடுபூந் தொடையும் புனையா ளிருவிழிக்கு
நலங்கொண் டொளிரஞ் சனந்தீட்டா ணயந்து திலத நுதற்கணியாள்
கலங்கும் விரகத் துடியாலே கமழ்பூங் குழலு முடியாளே

(116)

அரிய கழங்கம் மனைசுனைநீ ராடாள் கானே ரிசையிலான்
பிரிவின் வளர்க்குங் கிள்ளைமுகம் பாராண் மாலைக்
கையணையாள்
பிரியந் தருசொற் பூவையறம் பேணான் விரகக் கொடுமையினால்
உரிய பாங்கி யர்க்கேவல் உவந்து செய்வான் மனமுவந்தே

(117)

## தூது விடுத்தற் கேதுவும் தூதுக் குரியனவும்

தென்ற லானுங் குயிலானுந் திங்க ளானும் வேயானு
மன்றி லானுங் கடலானு மந்தி வருசே பணியானும்
வென்றி மதவே ளானுமிசை வீணை யானு நொந்துமனங்
கன்றி யூர மயலணையிற் கலங்கும் போது நலம்பெறவே
*(118)*

கொண்டல் பாங்கி மயில்பூவை குயில்பூம் பொதிய
மலைத்தென்றல்
கண்ட நறும்பூ மடவன்னங் கருது நெஞ்சம் பசுங்கிள்ளை
வண்டு விறலி பிறவுமிவள் வருத்த மகலும் படித்தூது
விண்டு தலைவன் புயமாலை வேண்டித் தருதற் கியல்பினவே
*(119)*

## (14) கச. ஆவது மடவார் பாதாதி யுவமை யலங்காரம்

தவமெய்ஞ் ஞான ருளத்தினிக்குந் தண்டே ணனையாள்
கழல்பேணித்
துவமா மேரு கிரியணைய தோளான் சுக்ரி மகிபனுயர்
நவம துறுமொண் டடவரைநேர் நாரி யார்தம் பாதாதி
யுவமை யலங்கா ரம்புகல லுற்றாங் கவியெண் பூன்றிரண்டால்
*(120)*

## உள்ளடிக்குங் கால் விரலுக்கு முவமை

வனச மனைமாந் தளிர்முயலின் வயிறு செயலை யனத்தூவி
சுனக னாக்குச் செம்பஞ்சு துகடீ ரனிச்ச மிவைமடவார்
வினவுள் ளடிநேர் பெறுங்காலின் விரங்க டமக்கு மஞ்சண்முன்
யளவென் றுரைப்போர் துவர்க்கொம்பு மாமென் றுவந்து
சொல்வாரே

(121)

## கால் விரலுகிர், புறங்கால், பரடு இவைகட் குவமை

காலின் விரல்சே ருகிர்படிகங் கணம்பத் தாகக் கடைந்தமதி
காலும் புறங்கால் கமடமும்புத் தகமும் கமுகம் பாலையுமாம்
பாலின் பாலை யுட்குளும்பை பந்து தராசு சிப்பியிவை
நாலும் பரட்டுக் குவமையென நவில்வ ரியனூற் கவிவலரே

(122)

## குதிங்கால், கணைக்கால் இவைகட்குவமை

பரவு சிறுதூ ரிகைப்பெட்டி பந்து சங்கு வனசமுகிழ்
இரச நறுமாங் கனிகுதிங்கா லேற்கு முவமை பெறுந்தூணி
விரவு தேன்பூ விரியானை வேணு காணம் விராலைந்து
முரவு கணைக்கா லுக்கிணங்கு முவமை யாமென் றுரைப்பாரே

(123)

## முழந்தாள் தொடைகட் குவமை

ஆலவன் பசுமூக் குற்றதிர டாழ்வாய் மணிகே டகத்தின்குமிழ்
சுலவு முழந்தாட் குவமையெனச் சொல்வார் தொடைக்கா
லைத்துதிக்கை
சலமி வீணா விளங்கதலித் தமப மல்குற் றடநீந்தக்
குலவு தெப்பந் தூணான்குங் குறிசே ருவமை நெறியினவே.

(124)

## அல்குல் பெண்குறி இவைகட் குவமை

மொற்றட் டணங்க னரண்மனைவேள் மொக்கி டங்காம் கலம்பூப்பை
தெற்று தேன்கூட டரவபடஞ் செந்தா மரைப்பூ மதுக்குழாஅய்
பற்றும் வாழைப் பூமடல்பொற் பதக்கங் குதிரைச் செவிதேர்த்தட்
டுற்ற வமுதச் சருக்கரைகூட குடும்பின் வாய்பைந் தேன்கிணறு

(125)

அடருந் சத்தி பீடமத னால வட்டங் குளமடையாற்
கடறூய் விளக்கு சங்கநிதி கன்ன றளிர்வெற் றிலைவிண்ணிற்
படரு மரசி னிலைபட்டம் பருவ மேழுக் கல்குறனைத்
தொடரு முவமை பெண்குறிக்குச் சொல்ல தகுமான்
குளம்பெனவே

(126)

## இடைமடிப்பு, வயிறு, இவைகட்குவமை

கொடிநூற் றுரும்பு தேய்ந்தபிறைக் கொழுந்து சிங்க மதன்வஞ்சி
துடிவிண் மீன்கைப் பிடிகுலிசம் சுருதி யிடைக்கொப் பாமேலும்
படிநேர்ந் திரையொப் பாமடிப்பும் பயிலும் வயிற்றுக் காலிலையும்
கடிசேம் பிலையு மதிப்பிளவுங் கதலிக் குருத்து மிணையாமே.

(127)

## உந்தி வயிற்று ரோமத்தொழுங்கு

வட்டச் சோகி மல்லிகைப்பூ வகுள்நீர்ச் சுழிநந் தியாவர்த்த
மொட்டென் றுவமை யுந்திக்கு மொழிவர் சலாகை வார்கயிறு
துட்ட மதன னாளொழுக்கந் தும்பித் துதிக்கை
யெறும்பொழுக்கம்
விட்ட கரிய மணிக்கோவை விதிரிட் டேகு மததாரை (128)

விரும்பி யாலி லையின்டுநரம்பு விண்டு கிடக்கு மிரதவடங்
கரும்பாம் பிளநீர்க் காம்புநறுங் களபத் தின்றண் குளத்தாரை
யிரும்பார் வனசப் பூம்பசுந்தர ளவிர்வான் றாரை யென்றியைய
விரும்பே ருவமை பெறுமடிப்பின் வயிற்று ரோமத்
தொழுங்கினுக்கே

(129)

## தனத்திற் குவமை

வல்லுச் சக்ர வாகமதன் மகுட லெமிச் சங்கனிபூண்
வில்வக் கனிமாங் கனிதேங்காய் விறலின் கனிகோ புரத்தூயி
சொல்வெற் பிளநீர்க் கதலிப்பூச் சொன்னத் தூளஞ் சிவலிங்கந்
தெல்லுக் கரகங் கோங்கரும்பு சிமிழ்பம் பரம்பொற் கிடங்கிண்ணம்
(130)

செண்டு குமிழ்வார் கூடாரஞ் சேவின் திமில்பொற் கரண்டகமென்
புண்ட ரிகமு கிழ்பந்து புன்னைக் காய்மா தளங்கனிமேற்
கொண்ட புளகப் பிடிசெப்பு கொட்டைப் பாக்கு பரிதிமதி
மிண்டு பமத்த கமருப்பு மிளிரு முண்டை பசும்பொற்றோர்
(131)

படர்ந்த செம்பு மாவிலிங்கின் பழமா றேழு மிலைந்திருமாந்
தடர்ந்து விம்மிச் சுணங்கரும்பி யண்ணாந் திளகிப்
பணைத்தெழுந்து
தொடர்ந்து களப மொழுகநறுந் தொய்ய லிலங்க வெண்டரள
வடங்கொள் புளக முலைக்குவமை வகுத்தார் பருவத்
திறனுணர்ந்தோர்
(132)

## கைவிரல், விரலுகிர் இவைகட்குவமை

அலரிக் காய்முத் திரைக்கோல்பொன் னாழி துலங்கு பயிற்றங்காய்
குலவப் படுமாந் தளிர்பவளக் கொம்பு களிறு கிட்டிக்கோல்
நிலவச் சுழலுந் திறவுக்கோ னேரு மிருகை விரற்குவமை
கலவப் படுமவ் விரலுகிர்க்கு கருதுங் கிளிமூக் கொப்பாமே

(133)

## அங்கை, முன்கை, தோள் இவைகட்குவமை

துளஞ்சேர் செந்தா மரைகாந்த டுலங்கு முச்சித் திலகுமென
வளஞ்சே ரங்கை பெறுமுவமை மாறு முன்கை யாழ்க்கோடு
விளங்கு மெழிற்பூ ரணகும்ப மிசையிற் றரித்த மாலிகைவேய்
கிளர்ந்த மலர்ப்பஞ் சணைமூன்றும் கிளர்மென் றோளுக்
கிணையாமே

(134)

சங்கு செப்பு மாலிகைக்குச் சனிப்பூச் சூல்கொ ளிளங்கமுகு
மங்க லஞ்சேர் சுருளேந்து மடலுங் கழுத்துக் குவமைபெறுந்
திங்கள் படிமக் கலங்கமலஞ் செண்டு பூத்தட் டிவைதரணி
எங்கும் புகழுந் திருமுகத்துக் கிசையும் முத்தம் வியர்வாமே

(135)

## இதழ், வாய் இவைகட்குவமை

கொண்டை பவள முருக்கிந்தர கோப மிலவு செம்பரத்தந்
தொண்டை வீழி யமுத்துண்டஞ் சொற்க பாட மாதுளம்பூ
வண்டு கவியுஞ் செங்குமுத மலர்தூ துளைசெங் கமலமொப்புக்
கண்டு மொழிந்தார் ஈரிதழ்க்குங் கனிவாய்க் கிணையாஞ்
செங்குமுதம் *(136)*

## பல், நகை எயிறு இவைகட்குவமை

முத்துத் தளவு புனையரும்பு முருந்து மாத ளங்கனியின்
வித்துப் பதும ராகமுணா விரும்பு மெயிறு தகும்பிரிவிற்
சித்துப் பொலியு நகைக்குவமை திகழ்வெண் ணிலவா
மெயிலுற்றே
யொத்துச் சிவந்தாற் பவளமுந்தா னொவ்வா தென்றே யுரைப்பாரே
*(137)*

## சொற்குவமை

வாகீ னுறுதீம் பால்செழுந்தேன் வன்னப் பசும்பூங் கிளியமுதம்
பாகு கரும்பு கற்கண்டு பாடும் யாழ்முக் கனிகீனி
யேகு பூவை சருக்கரைவண் டிரங்கு மிசைக்கோ கிலங்குழலென்
றாகு மிவைபன் னேழுமினி தருளுஞ் சொல்லுக் கிணைபோமே
*(138)*

## கவுள், நாகி இவைகட்குவமை

சந்தச் சாணைப் பரிக்கலணை சாரு மூக்கின் கண்ணாடி
யந்தக் கவுளி னுவமைசொல் லாருபட் பூவுங் குமிழரும்பு
முந்தக் கமழ்செண் பகவரும்பு முருங்கா ரிலவின் பூங்காம்பும்
பந்தக் கவிஞர் எல்லோரும் பகர்வார் நாகிக் கிணையெனவே

(139)

## விழிக்குவமை

மேல்வா ளமுதங் குருங்குவளை வேலை மாவின் வடுவகிர்மான்
கோல்பங் கயமஞ் சனங்குடங்கை கூற்று வண்டு வலைமழை
சால்பி னுறுகஞ் சனங்கயல்சேல் சகோரம் வழிபோய்க் குழைபடர்ந்து
மால்வி தாதச் சிவனுருவின் வழங்கும் விழிக்கொப் பிவையாமே.

(140)

நெஞ்சுங் கருத்த போதைக்கு நிகழ்த்தும் விழிசெங் குமுதமொப்பாம்
வஞ்ச முடன்கோ ரமுமிகுந்து மையல் பூட்டுங் கருணையுமாய்த்
துஞ்சு மதர்ப்பி னொருகருமை சூழ்ந்து கருமை நெறியுடைத்தாய்
விஞ்சை மதனா கமவழியும் விளங்கும் கடைக்கண் வேலாமே.

(141)

## காது, புருவம் இவைகட்குவமை

நகுபூம் வள்ளை பொன்னூசல் நவில்கத் திரிகை சுடுத்தலைமான்
புகுதும் வாச னாரங்கி புகழுங் காதுக் குவமையுறுங்
தகுநீ லாஞ்சன முஞ்சலசத் தாளி னொடுகிங் காடிவில்லுஞ்
சேகும் வாளு ரையுங்கடன்கரை செப்பும் புருவ மொப்பாமே.

*(142)*

## நெற்றி, திலகம் இவைகட்குவமை

அகத்தி யரும்பும் வாசிகையு மணுகக் குணிக்கும் பூஞ்சிலையும்
பகுத்த பிறையுங் கொக்கிறகும் பகரு நுதலுக் கிணையாமே
வகுத்த நுதலிடுந் திலக மன்னுந் தினச ரோதயமுஞ்
சகத்திற் கிறைவ னுதற்கண்ணுந் தயங்கு மொப்பா மியம்பாயே

*(143)*

## கூந்தலுக்குவமை

கொன்றைக் கனிகல் லார்மனது கூந்தற் கமுகு பொதுமடந்தை
தன்றனி தயங்குன் சவரி கருமை யடர்கங்குன்
மன்றங் கமழுமஞ் வயங்குஞ் சிறைவண் டிளஞ்சோலை
துன்ற வருபைம் புனல்கொழிக்குந் தூய வறலிந் திரநீலம்

*(144)*

இருள்சை வலமோர் பூவைந்து மிணங்க மிளைஞ ராயிரு
முருவும் பலமென் றும்பூவு மொக்கச் சொருகீக் கடைசுழன்று
வருமைச் சுழுகு போனெயித்து வண்டு சூழ்ந்து குயவார்ந்து
தருதேன் றுளிப்ப வழிந்தொழுகுந் தகரக் குழலுக் கொப்பாமே

*(145)*

## சடைக்குவமை

கண்ணைக் கமுகின் பூம்பாளை கரிய பிடியா னைத்துதிக்கை
யென்னக் கூறு மதிப்பகையும் மேற்கப் பிச்சி மருக்கொழுந்து
புன்னைப் பூச்செண் பகமுல்லைப் பூச்செவ் வந்தி பொலிந்திலகம்
பின்னுக் கழகாய் வகுப்பெடுத்துப் பின்னி விடுபூங் குழற்கிணையே

*(146)*

## (15) கரு. பெண்ணுவமை யலங்காரம்

விழவிற் பொலியு மடிகை மாலை மேவு மெந்தை நளினமலர்
கழலிற் பொலியு மடியவர்தாய் கழலைத் தொழுது கவிபூன்றி
னிழலிற் பொலியுஞ் சுக்ரீப ணருப னாட்டு வனிதையர்போ
லழுகிற் பொலியும் பெண்ணுவமை யலங்கா ரத்தை யறைகின்றாம்

*(147)*

குயின்மோ கினிதேன் பாடுகிள்ளை கொடிமின் காம னபிடேக
முயிர்பா னாசைக் களஞ்சியம் பொன் னோங்குங் காமக்
கலைஞானம்
பயில்சேர் சொல்லி யம்பாவை பசும்பூங் கொம்பு சஞ்சீவி
மயில்பூங் கமல மமுதபுஞ்சம் வாடா விளக்கு ரசகுளிகை
*(148)*

திருமே னகையி ரதிமதிசெஞ் தேன்செங் கரும்பு மருக்கொழுந்து
மருவே தென்ற லுகுவகிசூர் மகளிர் காமன் குருபீடம்
விருதே தெய்வ மயிராணி வெண்முத் தார மடவன்ன
முருவே பிடியென் நிவைபிறவு மோதும் பெண்கட் கொப்பாமே
*(149)*

## வடிவு, மேனி, தேமல், சாயல் நடை, பார்வை, யிவைகட் குவமை

பின்னும் வடிவு பாவைதிரு பைம்பொன் மலர்செந் தளிர்மேனி
பொன்னும் வேங்கை நறும்பூவும் பொலிந்த தேமற் கிணையாகு
மின்னு மயிலுஞ் சாயலொக்கும் விகங்கம் பிடிமென் னடைநிகரு
மன்னு பார்வைக் கிணையிணையாய் மதித்தும் பிறவு மதித்துரையே
*(150)*

## (16) கசா. ஆவது புருடவுமை யலங்காரம்

நவிகூர் மழுவேந் தியவேத நாத கீத னோங்குகுழைச்
செவியா ளவிர்வாள் மதிச்சடையான் றிருத்தா டொழுது கவியாறிற்
பூவி மாதொ பூமலர்மாது புணர்மால் சுக்ரி மகிபனெனக்
கவினார் புருட வுவமையலங் கார மாமா றியம்பலுற்றாம்

(151)

திருமான் முருக னாளகேசன் தென்ன னிந்தி ரன்றுமுகில்
உருவார் மதனன் பஞ்சவர்கள் உண்மை வாச கன்குமுணன்
வருஞ்சீ வகன்மூ வேழ்வள்ளல் வனசச் சங்க நீதிபஞ்ச
தருமார்க் கண்ட னப்பாசி சயந்த னுதய யூகிமந்திரி

(152)

விதுரன் றுருவன் மகமேரு வியாழன் கண்ட னிடிபேறு
கதிரோன் சேடன் சீராமன் கலைசேர் முனிவ னிலக்குமணன்
றுதிசேர் வாணன் சிங்கேறு சோமன் பிறவும் புருடர்க்கு
மதிசேர் புலவர் வந்தினிது வழுத்து முவமை சிறப்பினவே (153)

நீதி வேள்வி வெற்றிகொடை நிலைமை செல்வங் கல்விதன
மோது மேன்மை யூகமகழ் குண்மை பொறுமை காப்புவலி
யோதும் பிறவும் புருடகுவமை போந்த மறையோர்
முதலோர்க்குப்
பாது காத்துத் தக்கவகை பாடு மியற்பிற் பகர்வாயே
(154)

தோற்று நிந்தை துதிநிந்தாத் துதியென் றியம்பு மவைமூன்று
மேற்றுந் தக்க வியல்புதகா வியல்பு நோக்கா திழிவுயர்பிற
போற்று முறையா மீரியல்பின் பொருட்சார் பறிந்து
பொருந்துநெறி
சாற்று முவமை யணிகொடுத்துச் சான்றோர் மதிக்கச் சாற்றுவையே
(155)

மன்ன ரீன்ற புதல்வருக்கு வயதீ ராறு முதலாமேற்
பன்ன வருமீ ரெட்டளவும் பரவு முருக னொப்பாகும்
கன்னல் மொழிமங் கையர்தமக்குக் கதித்த பெதும்பைப் பருவமுதற்
சொன்ன வரிவைப் பருவம்வரை சொற்ற திருக்கி ணையாமே
(156)

நினையும் வசைம திமுகங்க ணிழற்றுங் கமலஞ் சிலைமார்பு
முனைகொள் கரங்கா தருவசை மொழியும் புருட ருறுப்பினணி
புனைவா கருமம் புயன்மெயுருப் புகலு நான்கின்
பொருட்புணர்வொத்
தினைய வுவமை யலங்கார மெல்லா மையுமி யல்பினவே
(157)

## (17) களெ. ஆவது முப்பொருள் வகை

கதன முறுவெம் பரித்தொகையைக் கானி லுழலு நரித்தொகையா
யிதமுற் றிரங்கு மடியவரிக்கா யியற்றி னோன்பொற் பதமேத்தி
முதலு முரியுங் கருவுமென மொழிப்ப டுமுப்பொ ருள்வகையை
யிதவு கவிதை பதினொன்றா லுணரும் படிதேர்ந் துரைக்கலுற்றாம்
(158)

குறிஞ்சி முதலா யினவைந்தும் குறியா வவைசா ரிடனைந்து
மறிந்து கொளுமங் வீரைந்து மடைவே யிரண்டி லைந்திணையாம்
பிறந்த பாலை யொன்றொழியப் பேசு வதுநா னிலமாகுந்
திறன்செய் நிலனும் பொழுதுமெனச் செப்பு வதுமா
முதற்பொருளே
(159)

பகுகூ திர்முன் பின்பனி பகரு மிளமு திர்வேனில்
புகுமா வணிதொட் டிரண்டிரண்டாய் பொருந்து மாறும்
பெரும்பொழுதாம்
முகுமா லையா மம்வைகுறு வுற்று காலை யுச்சியெற்பா
டிகுசெங் கதிர்மை யந்தொடங்கி யீரைம் பதமற் றவையாரே
(160)

மனுகூ திருமுன் பனியுமியா மமுமாங் குறிஞ்சி வேணிலும்பின்
பனிநண் பகலும் பாலைமுல்லை படுகார் மாலை கார்முதலா
யினவும் வைகுறு வுமிரண்டு மிசையு மருதம் பெரும்பொழுதுந்
துனுமோ ராறு சிறுபொழுதின் சொலுமேற் பாடு நெய்தலுக்கே
(161)

குன்றிற் புணர்ச்சி யரும்பாலை கொடிய பிரிவு செறிமுல்லை
யொன்று மிருப்புத் தண்மருத மூட னெய்த லிரங்கலைந்துந்
துன்று மிவற்றி னிமித்தமைந்தும் தொகையாய் நின்ற யீரைந்தும்
வென்றி தகுநூ லியல்புணர்ந்து மேலோர் விரும்பு முரிப்பொருளே
(162)

பகருந் தெய்வ நிரூபரல்லோர் பரைபுள் விலங்கூர் தருநறும்பூத்
தகவி லுரைவு பண்ணொடியாழ் சலஞ்செய் தொழிலென் றீரேழுப்
புகல விளங்கு கருப்பொருளாம் போந்த மருளின் காரணத்தான்
மகிழ்ந்த முப்பொ ளுந்தந்தந் திணையாய் மயங்கும்
டெட்பெழுமால்

(163)

மட்டில் குறிஞ்சி முல்லைகிளர் மருத நெய்தல் பாலையைந்தும்
கிட்டும் அகமாம் பெருந்திணைகைக் கிளையு மொழிய கப்புறமாம்
வெட்டு வஞ்சி யுழிஞைதும்பை வீர வாகை யும்புறமாம்
திட்ப முறுகாஞ் சியும்பாடாண் டிணையு மொழியும் புறப்புறமே

(164)

கரந்தை வெட்சி குறிஞ்சிவஞ்சி காருர் முல்லைப் புறனாகும்
பரந்த மருதத் திற்குழிஞை பகர்நொச் சியுமா நெய்தலும்பை
புரந்த வாகை பாலைக்கும் புரனாங் காஞ்சி பெருந்திணைக்கா
மிரந்து சொலுங்கைக் கிளைபுறனுக் கிசையின் வருபா
டாண்டிணையே

(165)

நிலையி லாத பொருளொன்றை நிறுவி யெடுத்து நிலையினவாய்ப்
பலம துறவே கொளல்காஞ்சி பகரு மொருத லைக்காமம்
விலகு ராமற் புலவர்க்கு விதியி னெடுத்து வழுத்துவது
தொலைவிற் பாடாண் டிணையென்று சொற்றா ரியனூல் கற்றோரே
(166)

தெருவைத் திணையி னின்புறுக்காந் திருவ மணத்திற் களவுகற்பென்
றிருகை கோளிற் காட்சிமுத லியம்பு நான்கு கைக்கிளையின்
பொருளு முதலா கக்கிளத்திப் பொதுப்பெண் புணர்விக்
கலித்துறையால்
அருளுங் கோவைத் துறைநாநூ றாகப் பாடல் அகப்பாட்டே
(167)

திணைகைக் கோள்பன் மூன்றாகத் தெளியுங் கூற்றுக் கேட்போரே
மிணைவி னிகழு மிடங்காலம் டெட்பா டப்முற் றப்படுபயனே
யிணையி லிருநால் வகைமெய்பா டெச்சந் தகலிற் சொலுமுன்ன
றணையும் பொருளின் வகைதுறையென் றகப்பாட் டுறுப்பீ
ராறாமே
(168)

காட்சி முதலா வந்தணையும் கருத்தி னாலோர் தலைவேட்கை
யாட்சி லெதிர்புலம்பல் யதனா அருளுங் காட்சி முதலாகக்
கூட்ட மிலதோர் தலைக்காமக் கொடுக்கை யறுது யரிற்புலம்பல்
கேட்கு மவரி லாமொழியிற் கெளிக்கு மிரண்டாங் கைக்கிளையே

(169)

## (18) கஅ. ஆவது உதாரண மொழிபு

தடம தவேழத் தையுரி தாணு வமணே சரைப்பணியும்
வடபூ தாச மானபுயன் மதுர கவிநா வலர்புகழுந்
திடலி சையன் அக்கிரிமகிபன் செப்பு முசித்துச் சொலின்வேண்டு
மடரு தாரண வொழியீராறு (170)

பினாகம் பாசு பதஞ்சூலம் பிறங்கும் வேல்வச் சிரம்வேட்கை
பனாக மழுவங் குசங்கண்டம் பகர்ந்த சிவனா யுதம்பத்தாஞ்
சுனாசி முதலோர் தொழுமாலின் துலங்கும் பஞ்சா யுதஞ்சங்கு
வினாவு திகிரி யொருதண்டு வில்வா ளெனவு மியம்புவரால்.

(171)

இரவி யூர்தி தேரோகு மியம்புஞ் சகடொன் றதையீர்க்கும்
புரவி யேழு பச்சைநிறம் பொருந்து மருண னவன்பாகன்
விரவு கலையர் விதுவூர்தி விமானந் திகிரி யூன்றீர்க்கும்
தரவு பெறும்வெண் பரிடத்தாஞ் சங்க பாலன் சாரதியே (172)

சங்கம் பதும மகாபதுமஞ் சாற்று மகரங் கச்சபமே
யங்க மருவு முகந்தமின தமருங் குந்த முயர்நீலம்
பொங்கு மிசையும் வாசியுமாய்ப் புகலப் படுமிங் வொன்பானுந்
துங்க வியல்சேர் கவிவாணர் துதித்தற் குரிய நவநீதி (173)

நாட்டு மிருதார் மயிற்சேன மில்லின் பஞ்சு செம்பஞ்சு
பூட்டும் வெண்பஞ் சனத்தூவி புகலும் பஞ்ச சயனமதாங்
காட்டு மேல மிலவங்கம் கமழ்தக் கோலங் சாதிக்காய்
யூட்டு நறுங்கற் பூரமென வுரைக்கும் பஞ்ச மணமாமே (174)

வெற்பு நதிநா டூர்விரைதார் வெண்மைக் களிறு கொடிமுரச
நிற்கு மானை யிவையைந்து நிகழ்த்துந் தசாங்க மாமிவற்றை
யற்பின் மகுட மன்னர்முத லார்க்குஞ் சிறப்பித் தொவ்வொன்றாய்
பொற்பின் வகுத்துத் தரும்வகையிற் புலவோர் மதிக்க புகலுவரால்
(175)

நவில்சிங் கார மொடுவீர நகையே காந்த கருணைகுற்சை
குவியற் புதமச் சங்கோபங் குறிப்பி னாலிங் வொன்பானும்
புவியின் வேட்டு மலிநயத்திற் புலவர் புகழ்ந்து சொலுமகலக்
கவியால் வசன காரத்திற் காணு மினிய நவரசமே (176)

கவரி நிறைந்த குடற்தோட்டி தருப்ப ணந்தீ பந்துவச
மிவழு முரச மிணைக்கயலென் றியம்பு மட்ட மங்கலாம்
அவனி புகழுஞ் சங்கான மரிசந் தானந் தாரமொழிற்
பவமென் பாரி சாதங்கற் பகமென் றைந்து மைந்தருவே (177)

மல்லன் மயில்வா னரமுயல்கூர் வாளி துரக கதியைந்தாஞ்
சொல்லு மிரதங்க யம்வாவு துரங்கங் காலா ளெனநான்குங்
கொல்ல வெதிர்நால் வகைச்சேனை குத்தல் வெட்டல்
எறிதலெய்தல்
வெல்லுங் கொடிய போர்த்தொழிற்கு வேண்டுங் கருவி நாற்கூறே
(178)

விதமார் கோகி லமன்றின் மிளர்வேய்ங் குழல்சே மணிகங்குல்
சிதமார் பொதியத் திருந்துவரும் தென்றல் விரிநீர்க் கடன்மதியற்
புதமா டத்திற் றந்தியுறப் புனையும் வீணை யிவையொன்பான்
மதவே ளினுக்கங் கிணங்குபரி வார மென்றே புகலுவரால் (179)

ஆடுந் தோகை மயில்செம்போத் தன்ன மாடப் புறவொடுபண்
பாடுஞ் சுரும்பு கோகிலம்பின் பறக்கும் பொறிச்செஞ் சிறைக்காமை
யோடுங் காணுங் கோழியென யுரைக்கு மெட்டுப் புட்குரலும்
கூடும் பொழுது மிடற்றிசையக் குறிக்குங் காமன் றொழிலாமே
(180)

பன்னு மிரவி சுழல்வண்டு பன்றி மஞ்சை நரைக்கொக்கு
மன்னு மெழிற்கண் ணாடிதுத்தி வயங்கும் விரிந்த படநாக
மன்ன முத்தி வானரமென் றறிந்தோர் பகரு மீரைந்திற்
றுன்னு கருமத் திறனமைந்தோன் றொல்பார் புரக்கு மன்னவனே
(181)

சாரு நந்து சலஞ்சலமீன் தலைக்கொக் கரவின் பல்வரிசை
நாரி யார்கந் தரமுடும்பு நாக முதலை காரேனஞ்
சேரி நதிக்கு வெதிர்பூசுஞ் செந்நெல் கதலி தந்திமருப்
பாரு மிப்பி னந்தித்தி னடைவின் முத்தந் தருமிடமே (182)

கங்கை பார தம்பசுநிரூபர் கனகோ புரம்வெண் கொடிமடவார்
அங்கஞ் சிவிகை கவிகைபரி யாலை வில்வ வனம்பதுமஞ்
சங்க மொளிர்சா மரைகளரி சத்திய வாக்கி யரிமார்பு
துங்க விடைநற் பவளநறுந் துணர்ப்பூந் திருமா துறுமிடமே
(183)

கொண்டை தொங்கல் பூஞ்சுரியல் கோலப் பனிச்சஞ் சுருளைந்துங்
கெண்டை விழியார் ஐம்பாலாய் கிளத்தும் புவிதா னியம்பொன்னி
மிண்டு மூர்தி மனைபுத்ரர் வேண்டு மடியார் இவையெட்கு
மண்ட லாதி பதிக்கிசைய வகுக்கு மைசு வரியம்மே (184)

# பின்னிணைப்பு

## பாடல் முதற்குறிப்பகராதி


| பாடல் | அடி | பாடல் எண் |
|---|---|---|
| 1. | அகத்தியரும் | 14-143 |
| 2. | அகன்ற லசரமணம் | 7-91 |
| 3. | அட்டகிரியும் | 6-79 |
| 4. | அடருஞ் சத்தி | 14-126 |
| 5. | அடுத்த காலன் | 1-4 |
| 6. | அண்டரண்டம் | 1-15 |
| 7. | அரிய கழங்கம் | 13-117 |
| 8. | அருந்திச் சரசகவி | 9-103 |
| 9. | அல்லியீட்டி வாழை | 4-52 |
| 10. | அலரிக்காய் | 14-133 |
| 11. | அலவன் பசு | 14-124 |
| 12. | அறிவினோ தன் | 2-30 |
| 13. | அன்னம் போலு | 5-68 |
| 14. | ஆடுந்தோகை | 18-81 |
| 15. | ஆதி வேத | 2-23 |
| 16. | ஆமையுருக் | 1-14 |
| 17. | ஆயர் பெருமான் | 1-11 |
| 18. | ஆர்த்த மதவேள் | 5-66 |
| 19. | ஆலிலரவிற் | 1-19 |
| 20. | ஆலும் பரத | 6-81 |

| | | |
|---|---|---|
| 21. | ஆறிலொன்று | 2-27 |
| 22. | ஆறுமாறு | 10-104 |
| 23. | இயற்கை | 8-95 |
| 24. | இரதம் வசந்தன் | 4-45 |
| 25. | இரவியூர்தி | 18-173 |
| 26. | இருந்தாகமு | 7-85 |
| 27. | இருள்சைவ | 14-145 |
| 28. | இலங்கு பணி | 13-116 |
| 29. | இன்ப தலைவிதன் | 8-93 |
| 30. | இனமாய் வருகை | 7-90 |
| 31. | ஈட்டும்பத்தா | 5-65 |
| 32. | உயர்வான் பரவு | 3-33 |
| 33. | உலகமளந்து | 1-12 |
| 34. | உலகமியாவு | 10-107 |
| 35. | உளத்தின் மாற்றார் | 3-36 |
| 36. | உன்னுபாலன் மீறி | 6-84 |
| 37. | ஏற்ற முல்லை | 4-57 |
| 38. | ஒத்த குலத்திலான் | 7-87 |
| 39. | ஒருவனு பயபதம் | 5-60 |
| 40. | கங்கை யிரதம் | 18-184 |
| 41. | கடந்த மோனத் | 5-73 |
| 42. | கடலை யடைத்தோன் | 1-10 |
| 43. | கண்ணைக் கமுகின் | 14-146 |
| 44. | கணமு மடியா | 12-112 |

| | | |
|---|---|---|
| 45. | கதனமுறு | 16-158 |
| 46. | கம்புரிசை கதிர் | 4-53 |
| 47. | கயலிற் காலம் | 5-62 |
| 48. | கரந்தை வெட்சி | 18-166 |
| 49. | கரவாய் நினை | 11-109 |
| 50. | கள்ள றாமென் | (அவை. 7) |
| 51. | களவுகற்பாம் | 8-96 |
| 52. | கன்று குனிலா | 1-8 |
| 53. | காட்சி முதலா | 17-70 |
| 54. | காண்டல் வேட்கை | 12-113 |
| 55. | காலின் விரல் | 13-122 |
| 56. | குயின் மோகினி | 15-148 |
| 57. | குலத்துளூரியோன் | 7-88 |
| 58. | குறிஞ்சி முதலா | 17-160 |
| 59. | குன்றிற் புணர்ச்சி | 17-163 |
| 60. | கூவத் தெரியா | 5-61 |
| 61. | கொடிநூற் | 14-127 |
| 62. | கொண்டல் பாங்கி | 13-119 |
| 63. | கொண்டை தொங்கல் | 18-185 |
| 64. | கொண்டை பவள | 14-136 |
| 65. | கொன்றைக் கனி | 14-144 |
| 66. | கைகால் கோச | 3-41 |
| 67. | கோட்ட முகில் | 3-46 |
| 68. | சகமுந் திசை | 6-83 |

| | | |
|---|---|---|
| 69. | சங்கம் பதும | 18-174 |
| 70. | சங்கு செப்பு | 14-135 |
| 71. | சந்தச் சாணைப் | 14-139 |
| 72. | சத்த சுரம் பாடத் | 5-64 |
| 73. | சதிர்சேர் சீர்மை | 3-37 |
| 74. | சதிரால் வழங்கும் | 7-86 |
| 75. | சரச மொழியினாள் | 5-71 |
| 76. | சவரி நிறைந்த | 18-176 |
| 77. | சாருங்குடியை | 2-26 |
| 78. | சாருநந்து | 18-183 |
| 79. | சித்ர கூடமேடை | (அவை. 4) |
| 80. | சிரசின் முல்லை | 4-56 |
| 81. | சீர் கொளடிகை | அ. 3 |
| 82. | சீராய்க் குலவு | 5-76 |
| 83. | சிலந்தருஞ் சொல் | 3-38 |
| 84. | சூட்டுக் கவி | க.வா: 1 |
| 85. | செக்கர் வான் | 1-5 |
| 86. | செண்டு குமிழ் | 14-131 |
| 87. | சேரத்து வளமின் | 5-72 |
| 88. | சொற்றார் நறு | 4-55 |
| 89. | சொல்லு மந்திரி | 3-34 |
| 90. | சொன்ன குடை | 4-49 |
| 91. | தடமதவேழத்தை | 18-171 |
| 92. | தண்டாமரை | 1-18 |

| | | |
|---|---|---|
| 93. | தரைமா மருகனை | 1-16 |
| 94. | தலைவன் போது | 5-82 |
| 95. | தலைவி யிசைவி | 7-92 |
| 96. | தவமெஞ் ஞான | 14-120 |
| 97. | தளவார் நகையார் | 11-108 |
| 98. | தன்றத்து வங்காய | 1-20 |
| 99. | திங்கண் மறை | 1-2 |
| 100. | திணத்திற் சிறந்த | 9-98 |
| 101. | திணை, கைக்கோள் | 17-169 |
| 102. | திரங்கொண்டிருந்த | 8-93 |
| 103. | திருமான் முருக | 16-152 |
| 104. | திருமேனகை | 15-149 |
| 105. | துஞ்சுகயலுந் | 5-74 |
| 106. | துணிவிற் பரத்தை | 10-106 |
| 107. | துதிமேவு பிரமணி | 1-19 |
| 108. | துளஞ்சேர் செந்தாமரை | 14-134 |
| 109. | தெருணா கரிகமுகில் | 1-21 |
| 110. | தெருவைத் திணை | 17-168 |
| 111. | தென்றலானுங் | 13-118 |
| 112. | தேய்ந்த பிறையை | 5-70 |
| 113. | தேர்ந்து செயற்பால் | 3-35 |
| 114. | தேவ சரித்திரம் | (அவை. 1) |
| 115. | தொக்க முறை | 7-89 |
| 116. | தோற்று நிந்தை | 16-155 |

| | | |
|---|---|---|
| 117. | நருபூம் வள்ளை | 14-142 |
| 118. | நலங்கொளமுது | 5-77 |
| 119. | நவிகூர் மழுவேய்திய | 16-151 |
| 120. | நவில், சிங்காரமொடு | 18-175 |
| 121. | நாட்டு மிருதார் | 18-177 |
| 122. | நாடிரதி மோகன | 5-69 |
| 123. | நாடு கதலி | 3-45 |
| 124. | நிலையிலாத பொருள் | 17-167 |
| 125. | நினையும் வசை | 16-157 |
| 126. | நீதி வேள்வி | 16-154 |
| 127. | நெஞ்சுங் கருத்த | 14-141 |
| 128. | பகர் பூவசியர் | 2-32 |
| 129. | பகு கூதிர்முன் | 17-161 |
| 130. | படர்ந்த செம்பு | 14-132 |
| 131. | பதிக்கு மதனன் | 4-51 |
| 132. | பதிவாயு | 11-110 |
| 133. | பரவு மிரு | 1-17 |
| 134. | பரவு சிறு | 14-123 |
| 135. | பரிவிலணி | 6-80 |
| 136. | பருவ முகி | (அவை. 6) |
| 137. | பன்னு மிரவி | 18-182 |
| 138. | பாக்கிய மிலங்கு | 3-40 |
| 139. | பாங்கு நிமிரும் | 9-101 |
| 140. | பாத மாதி | (அவை. 2) |

| | | |
|---|---|---|
| 141. | பிச்சி கொடி | 4-54 |
| 142. | பின்னும் வடிவு | 15-150 |
| 143. | பினாகம் பாசு | 18-172 |
| 144. | புகழ்சேர் மறையா | (சி.பா. 1) |
| 145. | புகழ்ந்தாபரணந் | 9-99 |
| 146. | புடத்திற் றெளியு | 6-78 |
| 147. | புத்தகம் படிக்க | (க.வா. 3) |
| 148. | பூவார் செழுந்தண் | 1-1 |
| 149. | பொசியு மருத | (சி.பா. 2) |
| 150. | பொருவல்ல | 4-47 |
| 151. | பொருவிலுயர் | 2-28 |
| 152. | பொருளைக் குறித்து | 2-25 |
| 153. | போற்றுந் திருட்டி | 5-63 |
| 154. | மச்சமெனப் போய் | 1-13 |
| 155. | மட்டில் குறிஞ்சி | 17-165 |
| 156. | மந்த மருத்து | (அவை. 5) |
| 157. | மருவியொரு | 10-105 |
| 158. | மல்லன் மயில் | 18-179 |
| 159. | மலையார் | 4-59 |
| 160. | மறுவிலாப் | 3-39 |
| 161. | மன்னரீன்ற | 15-156 |
| 162. | மனதின் மோகஞ் | 4-58 |
| 163. | மனுகூதிரு முன் | 17-162 |
| 164. | மனுவிக்கியான | 2-24 |

| | | |
|---|---|---|
| 165. | மாதர் மனதை | 3-43 |
| 166. | மாலுக்குச் சநக்கர | 1-6 |
| 167. | மாவின் றளிர் | 3-44 |
| 168. | மிசையிற் பஞ்ச | 9-102 |
| 169. | முந்தித் தவத்தோர் | 1-3 |
| 170. | முத்துக்களப | 13-115 |
| 171. | முத்துத் தளவு | 14-137 |
| 172. | மூன்று தமிழினி | (க.வா. 2) |
| 173. | மெச்சு பெருமை | 8-994 |
| 174. | மொற்றட் | 14-125 |
| 175. | மேல்வாள | 14-140 |
| 176. | வட்டசோகி | 14-128 |
| 177. | வண்ண மகளிர் | 9-100 |
| 178. | வல்லுச் சக்ர | 14-130 |
| 179. | வழுக்கில் | 2-31 |
| 180. | வசை மனை | 14-121 |
| 181. | வாகீனுறு | 14-138 |
| 182. | விண்ணுமகன்ற | 12-114 |
| 183. | விதமார் | 18-180 |
| 184. | விதுரன்று | 15-153 |
| 185. | விரியு மண்ட | 1-7 |
| 186. | விரும்பியா | 14-129 |
| 187. | விழவிற் பொலியு | 15-147 |
| 188. | வீசும் விரகா | 11-11 |

| | | |
|---|---|---|
| 189. | வீரச்சிலை | 5-*75 |
| 190. | வெல்லுதே | 4-50 |
| 191. | வெள்ளை(க.வா. 4) | |
| 192. | வெற்பு நதி | 18-178 |
| 193. | வெற்றி தருதற் | 2-29 |
| 194. | வேதமுறை | 2-22 |
| 195. | வேனிற் கண்டு | 5-67 |

## சிறப்பு அருஞ்சொற் பொருள் விளக்கம்

1. கதலி - தோற்றா (பிங்கல நிகண்டு)

2. கவுள்

(i) கன்னம்

(எ.கா.) "கண்ணீர் கவுளலைப்ப" (சீவக. 2050)

(ii) யானையின் கன்னம்

(எ.கா.) "நனைகவுள் யானையால் (குறள் 678)

(iii) யானையின் உள்வாய்

(எ.டு) "களிறு கவுளடுத்த வெறிகற் போல

(புறம். 30-8)

(iv) பக்கம்

(எ.டு) "ஒலி கவுள கிண்கிணியும் (சீவக. 2967)

3. (i) கன்னல் - கன்று, சர்க்கரை, கற்கண்டு (திவாகரம்)

- மணற்பாகு (பிங்கலம்)

- ஒரு வகைச் சிறு கருவி

(எ.டு) "கன்னலெனுஞ் சிறுகருவி.......

விளக்கேற்றுங் கார் காலம்" (பெருந்தொ. 1196)

4. குஞ்சரம் - கருங்குவளை

5. சலராசி - கடல் (பிங்கலம்) நீரோடு சம்பந்தமுடையது. கடக, மீன் முதலிய இராசி

6. சுனாசி - சுனாசீரன் (பிங்கலம்)

இந்திரன் (சூடாமணி)

7. சோமன் - சந்திரன், குபேரன் (சூடாமணி) ஒரு வள்ளல் (சூடாமணி) அஷ்ட அஷ்ட வசுக்களுள் ஒருவன் (பிங்கலம்) பரதவர் அணியும் அலங்கார ஆடை

8. பரடு - காற்கரண்டை

(எ.டு) "புடைச்சிறு பரடு புல்லி
கிண்கிணி சிலம்பொடார்ப்ப"

(சீவக. 24475)

9. பினாகம் - சிவன் வில் (சூடாமணி, திரிசூலம், மணிமாலை, மண்மாரி (யாழ். அக)

10. மத்தகம்

(i) தலை

(எ.டு) மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி

(திவ்பெரியாழ் 4, 5, 2)

(ii) உச்சி

(எ.டு) வாள்........... மத்தகத்திறுப்ப (சீவக. 2251)

(iii) யானையின் கும்பத்தலம் (சூடாமணி)

தலைக்கோலம், மலைநெற்றி, தரிசு நிலம்.

## சொல்லடைவு

அ

அகன்ற - 91

ஆ

ஆயர் - 11

இ

இயற்கை - 95
இரதம் - 48

உ

உயர்வான் - 33

க

கங்கை - 184
கண்டு - 22
கண்ணாடி - 139
கடல் - 10
கதலி - 127
கயிலை - 1, 93
கருமம் - 38, 157
கருமை - 141
கல்வி - 39

| | | |
|---|---|---|
| கவிதை | - | 104, 112, 158 |
| கவுள் | - | 42 |
| கன்று | - | 8 |
| கன்னல் | - | 156 |
| காடு | - | 45 |
| கால் | - | 41 |
| காலை | - | 161 |
| குடித்தோன் | - | 10 |
| குயில் | - | 49, 67 |
| குலவி | - | 103 |
| குற்றம் | - | 35 |
| குறிஞ்சி | - | 161, 166, 165 |
| குன்று | - | 8 |
| கூறுவோன் | - | 38 |
| கை | - | 41, 127 |
| கொடுங்கோல் | - | 27 |
| கொழுநன் | - | 27 |
| கொன்றை | - | 144 |
| கோகிலம் | - | 138, 180 |

ச

| | | |
|---|---|---|
| சங்கு | - | 172 |
| சஞ்சீவி | - | 63, 148 |
| சதிரால் | - | 86 |
| சூத்திரர் | - | 32 |

செண்டு - 131
செந்நெல் - 45
சேடியார் - 69
சேவடி - 107
சோதி - 107

ஞ

ஞானி - 70

த

தருமநெறி - 25
தலைவன் - 82, 93, 98, 106, 107, 119
தலைவி - 92, 93, 97, 98
தளவார் - 108
தாமரை - 18, 55, 57, 134
தானம் - 39
திணை - 168, 169
தீம்பால் - 138
தூரிகை - 123
தென்றல் - 118, 149
தோடுடைச் செவியன்- 3

ந

நாடு - 45
நீதிநெறி - 29

ப

பசு - 124, 184
பரி - 43
பிரிதல் - 106
பிறை - 70, 27
புணர்ச்சி - 93, 95
புரவி - 48
புரோகிதர் - 34
பூங்கா - 101
பூவார் - 1
பேதை - 82

ம

மடந்தை - 72
மணம் - 92
மத்தகம் - 41
மந்திரி - 34
மயில் - 64, 119, 181
மருக்கொழுந்து - 67, 104

| | | |
|---|---|---|
| மல்லிகை | - | 50, 51, 53 |
| மலரம்பு | - | 4 |
| மலை | - | 46 |
| மறை நூல் | - | 24 |
| மன்ற | - | 7 |
| மனையார் | - | 52 |
| மாதர் | - | 43 |
| மாலை | - | 117, 162 |
| மாற்றார் | - | 36 |
| முகில் | - | 152 |
| முயன்று | - | 3 |
| முரசு | - | 48 |
| முத்து | - | 115, 137 |
| முல்லை | - | 55, 56, 57, 134 |
| மூத்தோர் | - | 92 |
| மூன்று | - | 2, 23, 41, 47 |
| மோகினி | - | 6, 5, 9, 148 |

வ

| | | |
|---|---|---|
| வண்டு | - | 119, 136, 145 |
| வயிறு | - | 40 |
| வாய் | - | 41 |
| விடலை | - | 84 |
| வெண்குடை | - | 48 |
| வேளாளர் | - | 31 |